உ
சிவாயநம

# சந்திர தீபம்

தவத்தைப் பெருக்கவும், தர்மத்தைக் காக்கவும், சிவத்தைப் பேணவும், திருவருள் பூண்டது.

இதழ் - 1 காலயுத்திவருஷம் சித்திரை மாதம் 1ம் திகதி வெள்ளிக்கிழமை [14 - 4 - 1978] சுடர் 11

## உலகறிய ஓதுவீர் நீர் உணர்ந்தீரோ

இறைவனைத் சேரும் படி குறிகள் மூர்த்தங்கள் உண்டு. அடையாளங்கள் உண்டு. கோயில்கள் உண்டு. கோயில் வழிபாட்டிற்கு உற்ற நெறிகள் உண்டு. அந்த வேதநெறிவழிபட்டபோது அருள் தர அவரது நேர்மையின் திறனை கருணை உண்டு. இவை எல்லாம் அறியும்படி வேதங்கள் ஆயிரம் ஓதினாலும் நீர் உமது வாழ்வின் அக்கறையால் பொறுமை இழந்து இறைவன் ஒருவன் உளன் அவனை அறியவேண்டும் என உமது மனம் மட்டும் புகவில்லையே! இது எக்காரணமோ? எனக்கேட்கின்றார் திருநாவுக்கரசர். அதாவது உலகறிய நீர் ஓதுகின்றீர்! உபதேசிக்கின்றீர்! நீர் என்ன செய்தீர்? உம்மனம் ஏன் பற்றவில்லை!. இறைவனுடன் மனம் பற்றி இருந்தால் நிலை வேறாகிஇருக்கும் என்பதே அவரது கொள்கைபோலும்.

மனம் எப்பொழுதும் ஆரவாரத்தையே விரும்பும். ஒருக்கால் அம்மனதில் அந்த அழுக்கேறத் தொடங்கினால் பின்னர் அது எந்த நிலையிலும் சரிவராது. முட்டையை எப்படி நிமித்திவைக்கமுயன்றாலும் அது சறுக்கத்தான் செய்யும். அதேபோன்றுதான் மனிதனுடைய ஆரவார மனமும் நிமித்த இயலாது! இறைவனுடன் மனம்பற்றினார் எவ்வாறு இருப்பார் என்றால் அவனை நினைந்து புலம்பி அலம்புவர். தொண்டே அவரது புண்ணியம். சிந்தைசெய்து பூசனை புரியும் பூசகர். சிவனைப் பொருந்தும் தவமுடையார். பூங்கழலே பூவும் நீரும் கொண்டு போற்றுவார். அவன் விருப்பில் எப்பொழுதும் அமர்வார். பொய்மையான அன்பு அவரிடமில்லை. எல்லா உயிரிடத்தும் அளவிறந்த கிருபை உடையர். கருணை பொழியும் வடிவுடையர்.

இன்றைய உலகில் எத்தனையோ ஞானிகளது பொன்மொழிகள் அமுதவாக்குகள் தமிழ் மொழியில் ஆங்கிலத்தில் வேறு மொழிகளில் உள்ளன தமிழில்மொழிபெயர்க்கப்பட்டு பத்திரிகை மூலமாக சஞ்சிகை மூலமாக வெளிவருகின்றன. அவைகளை எமது மக்களும் பெரியோர்களும் படிக்கின்றனர். கேட்கின்றனர். மெச்சுகின்றனர். விழாக் கொண்டாடுகின்றனர். இவை யாவும் நன்கு நடைபெறுகின்றன. ஆனால் எங்கள் நாயன்மாரது தமிழ் வேதத்தை எத்தனை பேர் நன்குஉணர்ந்தனர்

இன்று சைவர் என்று சொல்லப் பெறுகின்ற நாங்கள் மட்டும் எமது சமயநெறிகளை வில்லுப்பாட்டு நிலையிலும் பொப்பிசை நிலையிலும் மேடைப் பிரசங்க அளவிலும் ஒலிபெருக்கியிலும் வானொலி அஞ்சலிலும் ரேப்றைகோட்டிலும் பட்டத்திலும் படத்திலும். தான் வைத்துள்ளோம். இதெல்லாம் முடிஞ்சு இப்பொழுது சினிமா நிலையிலும் வந்துள்ளோம். இனி கோயில் என்று இருப்பன ஒவ்வொன்றும் வானொலி அஞ்சல் நிலையமாகவும் சினிமா மாளிகையாகவும் இதுவுமன்றி டெலிவிசன் பொருத்தப் பெற்ற நிலையமாகவும் மாறிவிடும் என்பதுயாரும் சொல்லாமலே விளங்குகின்றது. கும்பாபிசேகங்கள் நடக்கின்றன. யாக மேடைகள் கட்டி சோடிச்சு பல்புகள் பல நிறத்திலும் பூட்டி குருக்கள் மாரும் அதற்குள் நின்று அக்கினி வளர்க்கிறார்கள். ஒலிபெருக்கி கதறுது. ரேப்றைகோடர் ஒருபுறம். படம்பிடிப்பது ஒருபுறம் சாரம் சேட்டு கைவாச்சு ஓடி ஆடி விறு விறுத்து எல்லாம் மிகு சோக்கு. ஆனால் யாகத்து வளர்த்த செந்தீ வலம் சுழித்ததோ? பாலிகை எப்படி? மூர்த்தி ஆவாகன அருள் குறிகள்? அது என்னவோ எனக்கும் தெரியாது? ஓம குண்டங்கள்சதுரம் வட்டம் கோணம் வேதிகைகள் மந்திரங்கள் யந்திரபூசைகள் அவை சரியாக உண்டோ எனக்கும் தெரியாது.

பின்னேரம் ஐயா தலைமையில் அல்லது அம்மா தலைமையில் அம்மாக்களும் ஐயாக்களும் கும்பாபிசேகச் சிறப்புப்பற்றி கூட்டத்தில் பராட்டல்கள் மலர்வெளியீடுகள்சிறப்பாக நடப்பன? ஆனால் அடுத்த நாள் கும்பாபிஷேகம் நடந்த கோவிலில் குப்பையார் அள்ளுறது. அது தெரியாது? வீதியில் கஞ்சல் அது தெரியாது? மூர்த்திக்கு அருகில் ஒரு விளக்கு ஒழுங்காக எரியுதோ அது தெரியாது? பார்த்தலும்மகிழ்தலும்பராட்டலுமேஅன்றிஇந்தக் கோவிலில் நித்திய பூசைக்கு எத்தனை பேர் தரிசிப்பார்? என்னமாதிரியோ தெரியாது. உண்மையாக கத்தோலிக்க மதத்தைச் சேர்ந்த என்நண்பர் ஒருவர் எம் திருநாவுக்கரசர் பெருமானது உழவாரப் படையின் திருப்பெருமையை உணர்ந்தளவு இன்னும் எமது யாழ்ப்பாணத்தில் எந்த ஒருசைவராக உள்ளவரும் உணரவில்லை என்பது எனது எண்ணம். எனது இந்த எண்ணம் சரியானது என்று நான் உங்கள் முன்பு அறுதியிட்டுச் சொல்வேன்.

அப்படியாக உணர்ந்தவர் இருந்தால் எங்கள் கோயில்கள் நிலை என்ன? வீதிகள் முழுக்க கஞ்சலும் குப்பையும் கடலைக் கொட்டைக் கோதும் வெத்திலைத் துப்பலும். ஆனால் மேடையில் பிரசங்கம் ஆர்ப் பாட்டம் கூக்குரல் கைதட்டு சிரிப்பு சீக்காயடி இவ்வளவும் நடக்கின்றது. மதில் இடிஞ்சபடி மடப்பள்ளி கட்டியிருந்தாலும் மறந்தும் அதில் திருவமுது செய்து சுவாமிக்கு நெய்வேத்தியமில்லை. ஒழுங்கான ஒரு திருநந்தவன மிராது. மூர்த்திக்கு பக்கத்தில் ஒரு எண்ணை விளக்கு ஒழுங்காக எரியாது. ஆனால் கோயில் வீதியைச் சுற்றி ஒரு திருவிழாத் தினத்து மட்டும் பல ஆயிரம் ரூபா செலவழித்து மின்பல்பு பொருத்தப்பட்டிருக்கும். வீதி எல்லாம் வெளிச்சம் கண்ணைப் பொறித்தட்டும், கடலைக் கடை ஐஸ்பழம் ஒண்டுக்கு நாலு வைக்கும் பொடியள் இதெல்லாம் பிரமாதம். சாரமும் சேட்டும் கிறிலும் சிகரட்டும் பீடியும் இதெல்லாம் வீதி முழுக்க கூட்டம் கூட்டமாகக் காணப்பெறும், ஒருவராதல் திருவிழா வீதியில் பத்தியுடன் நிற்பாரைக் காண முடியுமோ? வீதியில் இருப்பார்என்ன பேசுவினம்?தெரியுமோ?

உண்மைத் தொண்டாகும்இறைவன் கோவில் திருப்பணியான கூட்டல் மெழுகல் விளக்கிடுதல் தூபமிடல் மலர்கொய்தல் மாலை கட்டல் சாத்தல் இவைகள் கூலியாளரது வேலையாகவும் மேடையில் நிற்பார்மட்டும் தொண்டர்களாகவும் கௌரவத்திற்குரியவராகவும் கருதப்படும் காலமாகிவிட்டது. இதையாரும் மறுக்கமுடியுமா? மக்கள் தீர்ப்பு மகேசன் தீர்ப்பு என பத்திரிகைகள் முழங்குவது போல் மக்கள் விரும்பிய படியே யாவும் நடைபெறுகின்றன. உண்மையில் ஆகமங்கள் எதைச் செய்யச் சொன்னதோ அதை நாம் செய்யாது அது நாகரீகமற்றது இக்காலத்திற்கு பொருந்தாது செய்யவும் முடியாது என்று நீக்கிக் கொண்டே வருகின்றோம். எம் செயல்களை இக் காலத்தில் மக்கள் மதிப்பைப் பெறும் வகையில் பெரும் பாலும் செய்கின்றோம்.

ஆனால் ஆகமங்கள் கடவுளின் மதிப்பைப் பெற வழி மொழிந்தன. இன்று எந்த ஒரு செயலை கோவில்களில் செய்யப்போனாலும் ஒரு பரிமளிப்பு சத்தப் பொறுதி வேண்டியிருக்கிறது. இல்லாவிட்டால் மனம் திருப்தி இல்லை. எமது செயலை நாலுபேர் அறியட்டும் என்றே நடைமுறைகள் தொழிற்படுகின்றன. ஆனால்இறைவன் உளன் அவன் மொழிந்த ஆகமவழி நாம் என்ன பாடு பட்டும் சீலமுடன் செயல் படுவது தான் அன்பாவது என உணருகின்றோமில்லை. காரைக்கால் அம்மையார் கைலை மலையில் இறைவனிடம் செல்லும்போது தலையால் நடந்து சென்றார். அவவினுடைய எண்ணம் சுவாமியிருப்பிடத்து நான் காலால் மிதித்தலும் ஆகாது என்றதுபோலும் அப்படி அம்மை தலையால் நடந்து ஏறி வர அது கண்டு எம் உமை அம்மை தம் பெருமானை நோக்கி

ம ப பா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தலையினால் நடந்து இங்கு ஏறும் என்பின் யாக்கை அன்பு என்னே?

எனக் கேட்டருளியதாக என் அப்பன் சேக்கிழான் பெரிய புராணத்து சொல்கின்றான். இந்த காரைக்கால் அம்மை இருந்த இடம் திருவாலங் காட்டினை காலால் மிதிக்கவே சம்பந்தர் பயந்தார். திருநாவுக்கரசர் இருந்த திருவதிகை உள்ளாக நான் காலால் மிதியேன் என்று வெளியில் ஓர் மடத்தில் துயின்றார் எம்பிரான்சுந்தரர். இவர்கள் நிலை இப்படியாயின் உங்களுடைய கோவில்களில் நீங்கள் என் செய்கிறீர்? கோவில் மூர்த்திக்கு நேரே மேடை அமைத்து அது போதாதென்று கம்பளம் விரித்து அதற்கு மேல் கதிரை போட்டு வில்லுப் பாட்டு கச்சேரி நடனம் சமயச்சொற்பொழிவு பொப்பிசை வைக்கிறியள். இது தானா நீங்கள் இறைவனுக்கு செய்யும் மதிப்பு? இது அன்பா?

இது தவறு என்று இன்று வரை எந்த சிவத்தமிழ் செல்விகள் செல்வர்கள் கவிஞர்கள் ஆநந்த யோகிகள் அந்தணர்கள்ல் வித்துவான்கள் யாருமே எடுத்துப் பேசியதுண்டா? எந்த ஒருசமயப் பத்திரிகையாதல் அல்லது சபையாதல் இப்படி ஆலயத்தில். செய்வது தவறு என்று சொல்லியிருக்கிறீர்களா? சேக்கிழாருக்கு கச்சியப்பருக்கு விழா எடுக்கிறியள். அவர்கள் இந்த அருள் நிறைந்த நூலை ஏன் செய்து வைத்தார்கள் என்பதை விளங்கிக் கொள்வீரா? அவர்களும் நீங்கள் விழா எடுக்கவா செய்து வைத்தனர் காதலித்து ஓதுவோர் என்று கந்தபுராணத்து கச்சியப்பர் மொழிகிறார். மெய்ப் பொருட்கு உரியார் கொள்வர் மேன்மையால் என்று சேக்கிழார் மொழிகின்றார். காதலித்து ஓதுதல் எவ்வணம் மேன்மையாகக் கொள்வது எவ்வணம் என்று விழாவெடுக்கும் நீங்கள் விளங்கிக் கொண்டிரோ?

பெரிய புராணமும் கந்த புராணமும் சைவத்தின் சீலத்தை நன்கு விவரித்துள்ளன. அவற்றை உணர்ந்து அவற்றின் வழி நாம் ஒழுகி வருங்கால சந்ததியினரையும்அதைப்பேணும்படிசெய்தல்தான்விழா அதைவிடுத்து ஒருநாளைக்குமட்டும் ஆடிப்பாடி பேசிக் கூத்தாடி ஊரார் பணத்தை ஒன்றுக்கும் உதவாத வகை மண்ணாக்குதல் நன்றல்ல. மக்கள் சீலத்தைப் பேணபரீட்சைவைத்தோ? பரிசுகொடுத்தோ ஊக்குவித்து வரப்போவதில்லை. நாம் நாம் அடக்கமுடன் மேற்கொள்ளும் சீலத்தின்நலத்தாலும் தவத்தாலுமே செய்யமுடியும் இப்பாடல் முழுவதிலும் ஆரம்பத்தில் இறைவனுடைய இயல்புசொல்லி இவையறிந்து இன்னுமா தயக்கம் என்று சொல்வதாக பொறியிலீர் மனம் புகாதது என் கொல் என்றபோது தான் பெற்ற இன்பம் பெறுக இவ் வையகம் என்றவாறு. அப்பாடலை உரையுடன் கீழே தருகின்றோம். ஓதி உணர்ந்து செயல் படுங்கள் இவர்பாடலை உணர்ந்து கொண்டு இன்று கோவில்களில் நடைபெறுவதையும் கண்டு கொண்டு மேலே நான் சொல்வது தவறு என்றால் என்னைக் கண்டியுங்கள்.

மாசில் வீணையும் மாலை மதியமும்
வீசு தென்றலும் வீங்கிள வேனிலும்
மூசு வண்டறை பொய்கையும் போன்றதே
ஈசன் எந்தை இணையடி நீழலே.

மாசு ஏதும் இல்லாத நல்வகையான வீணையை வாசித்து ஓசை படுத்திக் கொண்டு இளம்பிறை வானில் விளங்கிடும் மாலை வேளையில் தென்றல் காற்றும் சிலு சிலுவென்று வீசி மெத்தென மேனியில் வந்துபட வேனிற் காலத்தில் இளவேனிலாகும் சித்திரை வைகாசிமாசத்தில் வண்டுகள் மொய்த்திடும்தாமரைப்பூக்கள்நிறைய மலர்ந்திருக்கும்குளத்தின் அருகில் இருந்தால் அந்த வேளை மனம் குளிர்ந்து உடலும் குளிர்ந்து சிந்தையும் மலர்ந்து என்ன சிறப்பு இது என எழும் தன்மை போன்றது என் அப்பன் சிவனுடையதிருவடி நீழல்.

வெய்யிற் காலமெல்லாம் அலைந்து திரியும் ஒருவனுக்கு வேனிற்காலத்து பொய்கைக் கரை எவ்வளவு குளிர்ச்சியோ அத்துணை குளிர்ச்சி தருவது சிவன் திருவடி நீழல் என்கின்றார். அந்த பேசரிய இன்பத்தை ஒருகால் சொல்லும் போது இந்த குளக்கரை இன்பத்தை மொழிகின்றார். 1

நமச்சி வாயவே ஞானமுங் கல்வியும்
நமச்சி வாயவே நானறி விச்சையும்
நமச்சி வாயவே நாநவின் றேத்துமே
நமச்சி வாயவே நன்னெறி காட்டுமே.

நமச்சிவாய என்னும் என் அப்பனது நாமம்தான் நாம் அறியும் அறிவும் எமது கல்வியும். நான் அறியக் கூடிய வித்தையும் அந்த நமச்சிவாயா தான். ஆகவே நமச்சிவாயாவை இப்படி வித்தையும் கல்வியும் ஞானமும் என்றீர் உலகில் என்ன பயன் அது தரும் என்றால் நமச்சிவாயாவை என் நாச் சொல்லிப் போற்றுமாகில் அதுவே நல்லவழி காட்டும். 2

ஆளா காரா ளானா ரை அடைந் துய்யார்
மீளா ஆட்செய்து மெய்ம்மையுள் நிற்கிலார்.
தோளா தசுரை யோதொழும் பர்செவி
வாளா மாய்ந்துமண் ணாகிக் கழிவரே.

இறைவனுக்கு ஆளாகார் அன்றி உணர்ந்து நல்வழிப்பட்ட பெரியோரை அடைந்து உய்ந்திடார். மீளாத அடிமை செய்து உண்மை வழி நிற்க மாட்டார். உணர்வில்லாத சுரைக்காயோ தொண்டு செய்வாருடைய செவி. இப்படியாக உண்மை விசுவாசமின்றி நீர்இருந்தால் வீணாக மாய்ந்து மண்ணாகிக்கழிவீரே. சொன்னாலும் காது கேளாதோ? 3

நடலை வாழ்வுகொண் டென்செய்திர் நாணிலீர்
சுடலை சேர்வது சொற்பிர மாணமே
கடலின் நஞ்சமு துண்டவர் கைவிட்டால்
உடலி னார்கிடந் தூர்முனி பண்டமே.

நடப்பான மகிழ்வு தரும் வாழ்க்கையைக் கொண்டு நீர் என்ன செய்கின்றீர். உங்களுடைய ஒய்யார நடையும் உல்லாசப் போக்கும் என்ன வகையில் உமக்கு உதவுவன? சிந்தித்தீரோ? சீ வெட்கமில்லாதவரே என்றோ ஒரு நாள் சுடலைக்கு நீர் சேர்வது அது உறுதியான சொற்பிரமாணம். எல்லாம் சொல்லலாம் அச் சொற்கள் பலிப்பன பலியாது போவன. ஆனால் இந்த சுடலை சேர்வது என்பது நிச்சயமாவது. ஆனதினால் நீர் ஆர் எப்படி இவை எல்லாம் என்பதைச் சிந்தித்தீரோ. உம்முடன் கடலில் தோன்றிய நஞ்சை உண்டு காத்த கருணையன் இருக்கின்றான். அவர் உம்மைக் கைவிட்டால் உமது உடலினார்க்கு இடம் எங்கு தெரியுமோ? அது ஊரார் ஐயோ மணம் பொறுக்கவில்லை எடுங்கோ என்று வெறுத்துக் கத்திடும் பண்டம் தான்.

உம்முடலைத் தோற்றுவித்து அதில் ஆர் இருப்பதால் சோக்கெல்லால் செய்யிறியள் இவ்வளவு ஆர்ப்பாட்டம் எல்லாம் எவரால் நிகழ்வன. அவர் அருளால் உமது உடல் இயங்குகின்றது என்பதை மறவாதீர். அவன் உம்மிடம் இருக்கின்றான் என்பதை உணர்ந்து அடக்கமாக வாழுங்கள் அன்பினைப் பெருக்குங்கள் ஆருக்கும் தீங்கினைச் செய்யாதீர் அவர் இவர் என்று பாராதீர். அனைவரிடமும் அருள் கொண்டு வாழுங்கள். 4

பூக்கைக் கொண்டரன் பொன்னடி போற்றிலார்
நாக்கைக் கொண்டரன் நாமம் நவில்கிலார்
ஆக்கைக் கேயிரை தேடி அலமந்து
காக்கைக் கேயிரை யாகிக் கழிவரே.

நித்தலும் தம்முள் நின்று வழிகாட்டும் ஒருவனாய கடவுளை பூவினைக் கையில் கொண்டு அப்பெருமானின் பொன்னடி போற்றினார் இல்லை. தனது நாவைக் கொண்டு இறைவன் நாமம் சொல்கின்றார் இல்லை. ஓயாது தனது உடலுக்கே இரைதேடி அலமந்து வாடி கடைசியாக ஓடியாடித் திரிந்த தமது உடல் காகத்திற்கு இரையாகும்படியோ வாழ்வைக் கழிக்கின்றார். 5

குறிக ளும்அடை யாளமுங் கோயிலும்
நெறிக ளும்அவர் நின்றதோர் நேர்மையும்
அறிய ஆயிரம் ஆரணம் ஓதிலும்
பொறியி லீர்மனம் என்கொல் புகாததே

இறைவன் உண்டு என நினைத்து தெளிவதற்கு குறிகள் உண்டு. அடையாளம உண்டு. கோயிலும் உண்டு. கோயிலில் இப்படி நடவுங்கள் வழிபடுங்கள் என்ற நெறிகள் உண்டு. அவ்வணம் வேத விதி தவறாமல் வழிபடுவார்க்கு அருள் புரியும் நேர்மை அவரிடமுண்டு. நீர் தவறினாலும் அவர்தவறாத கருணையாம் கிருபை உண்டு. இதெல்லாம் அறியும்படி ஆயிரம் வேதத்தை நீர் ஓதிலும் ஊர்க்கு உபதேசித்தாலும் நல்ல சித்தம் இல்லாதீர் உம் மனம் மட்டும் இறைவனிடம் பற்றாதது என்ன காரணம்?

எல்லாம் சொல்லுறீர் செய்வீர் உமது மனம் மட்டும் இறைவனிடம் பற்றவில்லையே அப்படி இறைவனிடம் மனம் கொண்டால் அதன்பெருமைசொல்லிமுடியுமோ? என்றபடி. 6

வாழ்த்த வாயும் நினைக்க மடநெஞ்சும்
தாழ்த்தச் சென்னியுந் தந்த தலைவனைச்
சூழ்த்த மாமலர் தூவித் துதியாதே
வீழ்த்த வாவினை யேன்நெடுங் காலமே.

வாழ்த்துவதற்கு எனக்கு வாயும் நினைக்க எனக்கு அறியாமை மிகுந்த நெஞ்சும் தாழ்ந்து வணங்கத் தலையும் தந்த என் கடவுளை அவர் திருவுருவம் நிறையச் சூழும்படி மலர் தூவி இட்டு நான் வணங்கித் துதியாது ஐயய்யோ நெடுங்காலம் என் வாழ்வைப் பாழாக்கி நின்றேனே! இதுவென்ன அநியாயம். 7

எழுது பாவைநல் லார்திறம் விட்டுநான்
தொழுது போற்றிநின் றேனையுஞ் சூழ்ந்துகொண்டு
உழுத சால்வழி யேஉழு வான்பொருட்டு
இழுதை நெஞ்சம் இதென்படுகின்றதே.

சித்திரம் போல் மிக அழகுடைய பெண்களுடன் கொஞ்சு மொழிபேசி அணைந்து மருவி இன்புற்று இனிதிருக்கும் செயலையும் வேண்டாம் என நீக்கி சிவனை செல்வத்தை அருள் அரசை என் அப்பனைக் காண்பேன் என்று தொழுது போற்றி நின்ற என்னையுமா நீ சுற்றி வளைத்து பற்றி நின்று உழுத சால் வழி உழும் சுகம் போல பழையபடிசறுக்கச் செய்ய பேய் போன்ற என் நெஞ்சம் இதென்ன பாடு படுகின்றது.

உலகவர் இன்பத்துறைபட்டு மாழும் மாதிரி நானும் போகலாம்ஏன் வீண் கரைச்சல் என்று என்னை மடக்கப்பாத்து இன்னுமா என் நெஞ்சேபதைக்கின்றாய் என்ன பாடு படுகின்றாய். மற்றவருடைய சுக வாழ்வு பற்றி நீபாராதே! உன் வாழ்வு பற்றி நீ உறுதி கொள். நீ சரியாய் இருக்க முயல்.

நெக்கு நெக்கு நினைபவர் நெஞ்சுளே
புக்கு நிற்கும்பொன் னார்சடைப் புண்ணியன்
பொக்க மிக்கவர் பூவும்நீ ருங்கண்டு
நக்கு நிற்பர் அவர்தம்மை நாணியே.

தன்னை நினைந்து நெக்கு நெக்குருகி நினையும் பெரியோரது நெஞ்சில் புகுந்து பேரருளாம் ஆநந்தம் சொரியும் பொன்னார்ந்த சடையுடைய புண்ணிய மூர்த்தி; பொய்யும் பேசி புரட்டிப் புழுகி காசு சம்பாதித்து அதைக் கொண்டு இறுமாந்து கொண்டு நான் மேலான ஒருவர் என நினைந்து கொண்டு பூவும் நீரும் சுமந்து பூசை புரியச் சென்றால் அவரையும் நோக்கி சிரிச்சுக் கொண்டு இவரும் என்னிடத்து வருகிறாரே என வெட்கப்பட்டு நிற்பார் எம் கடவுள் சிவன்.

புண்ணியச் செய்கைகளைத்தான் இறைவன் விரும்புவன். இதை உறுதி கொண்டுதான் சேக்கிழாரும் ஊர்மக்கள் செய்யும் அறம் யாவும நீதியாவும் கண்ணோட்டமான கிருபையாவும் வழிபாடு எனத்துணிந்து சொன்னார்.

விறகிற் தீயினன் பாலிற் படுநெய்போல்
மறைய நின்றுளன் மாமணிச் சோதியான்
உறவு கோல்நட்டு உணர்வு கயிற்றினால்
முறுக வாங்கிக் கடைய முன் நிற்குமே.

எம் இறைவன் விறகில் நெருப்பு இருப்பது போலவும் பாலில் பெறப்படும் நெய்போன்றும் எம்மில் மறைய நின்றுளான் அழகிய பெருமணியின் சோதியான அவன். விறகில் நெருப்புக்காண என்செய்வது என்றால் அந்த விறகை துண்டாக்கி நல்லாக ஒன்றுடன் ஒன்று உராய்ஞ்சித் தேய்க்க ஒளிவரும். பாலில் நெய் இருக்கின்றது அதை பெறுதற்கு பானையில் பாலை ஊற்றி மத்தை கயிற்றில் கட்டி நல்லாய்கடையநெய் வந்தது. அதேபோன்று சிவனைப் பெற உமது உள்ளத்து அவனுடன் உறவு என்ற கோலை நாட்டி ஓயாதுஉணரும் உணர்வென்னும் கயிற்றால் முறுக நன்றாகக் கடைய அப்பெருமான் உம்முன்நிற்கும்.

இதற்கு மிஞ்சி யார் என்ன சொல்லலாம் செய்யலாம்?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தங்கள் மலம் கழுவுவார் வந்து சார்தலினல்

எங்கு மாகி இருப்பவர் கோவில் பூசனைக்கு துங்க ஆகமம் சொன்னவாறு ஆராய்ந்து நிபந்தம் அமைத்தல் நன்று என்பது அநபாயச் சோழ அரசனது திருவுடைய மந்திரியாய சேக்கிழாரது திருவாக்கு. கோவில் வழிபாடு புனித மடைந்தால்நாடு சிறக்கும். பகை நீங்கும். மக்கள் இன ஒற்றுமையுடன் வாழ்தல் இவை போன்ற பலநலனும் உண்டாகும்.

மாணிக்கவாசகர் பாடியருளிய திருவெம்பாவைப் பாடலை கேளாத தமிழ் மக்கள் இன்றைய நாளில் இருக்கார் என்று சொல்லும் அளவிற்கு எல்லா இடமும் திருவெம்பாவைப் பாடல் ஒதுதல் நடைபெறுவன. உண்மையாக திருவெம் பாவைப் பாடலில் எம்பிரான் மாணிக்க வாசகர் எத்தனையோ நல்ல அறவுரைகளை நமக்குத் தருகின்றார். அக்கருத்துரைகளில் ஒன்று ஒருபாடலில் வருகின்றது. அதுதான் பைங்குவளைக் கார் மலரால் என ஆரம்பிக்கப் பட்ட அப்பாடலில் தங்கண் மலம் கழுவுவார் வந்து சார்தலினல் என மொழிகின்றார்.

இந்த வகை அவர் சொல்லிடும்போது ஓர் குளத்தைக் குறிக்கின்றார். இந்த குளம் எப்படியாது என்றால் எங்கள் பிரானும் பிராட்டியும் இசைந்தது போன்ற பொங்கு மடுவில் என்றே கூறுகின்றார். குளத்தில் மக்கள் மலம் கழுவச் செல்வது மரபு. இந்த வகை அவர் சொல்லும் அந்த மடு; எம்பிரானும் பிராட்டியும் போல இசைந்த மடு; யாது எங்குற்றது என நாம் ஊகித்தறிந்தால் அதுவே நாம் வழிபடச் செல்லும் கோவிலாக அமைகின்றது.

குளத்திற்கு எமக்குற்ற மலத்தை கழுவச் செல்கின்றோம். மலம் நாள் தோறும் உடலில் பெருகுவன, அது தெரியப்படும். மணக்கும். அந்த மலத்தைக் கழுவியே ஆகவேண்டும். அதற்குத்தானே குளம் இருக்கிறது. தூய நீரைத் தன்னிடத்தே கொண்டு இருக்கின்ற இந்தக் குளம் தான் எம்மைத் தூய்மை செய்ய உதவுகின்றது

அதே போன்று அழுக்காறு அவாவெகுளி முதலியன ஆன்மாவைப் பந்திக்கும் மலங்கள் மிகவும் பொல்லாத விளைவுகளை அவற்றை நீக்காத பொழுது ஏற்படுத்தி விடுகின்றன. அன்றியும் இந்த மலங்களாலும் நமக்குஅருவருப்புகள் விளைவன.

தனது மலம் தனக்கு அவ்வளவு அருவருப்பைத் தராது. ஆனல் பிறர்க்கு பொல்லாத அருவருப்பைத் தருவது. அதே போன்று ஆன்மாவைப் பந்திக்கும் மலமான அழுக்காறு அவா வெகுளி போன்றன அவை அவை தொழிற்படும் போது பிறர்க்கும் பெரும் அருவருப்பை உண்டாக்குவன. ஒருவரை நாம் பார்த்து இவர் பொல்லாத வாஞ்சை பிடிச்சமனிதன். இவர் பார்த்தலே தோஷம் என்கின்றோம். இன்னொருவரை இந்தாள் பொல்லாத கோபக்காரன். எடுத்தற் கெல்லாம் வெள் என்று விழும். இவரிடம் போகக் கூடாது என்கின்றோம். இன்னொருவரைப் பார்த்து இந்தாள் பொல்லாதகுரோதம் பிடித்தவர் ஆரேனும் உடுத்து உண்டு வாழக்காணச் சகிக்காது. ஏதும் ஒன்று சொல்லிய படியே இருக்கும். என்றெல்லாம் பிறரது குறைகளைக்கண்டு அருவருக்கிறோம். பிறரும் இப்படி ஏனையோரது குறைபாடுகளைக் கண்டு அருவருத்து மொழிதலைக் கேட்டுள்ளோம்.

ஆனல் உடலைச் சேர்ந்தமலம் கழுவ குளம் இருக்கு. உள்ளத்தைச் சேரும் இந்த அழுக்காறு அவர் வெகுளி முதலிய மலத்தை எங்கு சென்று கழுவுவது? அதுதான் இறைவனிடம் சென்று அவன் அருளாய நீரில் முழ்கி மும் மலமும் கழுவுகின்றோம். அதனலே மாணிக்கவாசகரும் இக்கருத்தை திருவுளத்திற் கொண்டு எங்கள் பிராட்டியும் எங்கோனும் போன்று இசைந்த பொங்கு மடுவில் தங்கள் மலம் கழுவுவார் வந்து சார்தலினல் என்கின்றார்.

இறைவனும் இறைவியும் சேர்ந்த அருள் நிலையங்கள் தான் கோவில். தினம் எம்பிரான் கோவில் புகுந்து அலகிட்டு (கூட்டி) மெழுகி மலர் கொய்து மாலைகட்டி இறைவனுக்கு சூட்டி முன்னின்று தலையாரக் கும்பிட்டு கூத்தாடி இப்படியாக எம்பிரானிடத்தாக தினமும் வழிபடலால் எம் உயிரைப்பற்றிடும் முன் சொன்ன கொடிய மலங்கள் தொழிற்படாது.

இதனையே திருநாவுக்கரசர் பெருமானும் ''மகாதேவா மகாதேவா என்று வாழ்த்தி நாவாண்ட புரோதாயம் (குளம்) மூழ்கப் பெற்றோம். கல்மனமே நன்மனமாய் கரையப் பெற்றோம்' என்கின்றார். அருணகிரியாரும் திரைவஞ்ச இரு வினைகள் நரை அங்க மலமழிய சிவகங்கை தனில் மூழ்கி விளையாடி என்கின்றார். இப்படியாக எமது பெரியோர் மொழிந்த வகைகளால் கோயில் நாம் வழிபட்டு புனிதமடைதற்கு ஏற்ற புண்ணியம் நிறைந்த இடம். இங்கெல்லாம் மக்கள் நித்தலும் சென்று வழிபட்ட அக இருளாய துயரத்தைக் கவலையைப் போக்கு மிடமாகும்.

இந்த கோவில் வழிபாட்டிற்கு ஆகமங்கள் இப்படித்தான் இவற்றின் நியமங்கள் அமைய வேண்டுமென சில அருளுடைய அம்சங்களைக் கூறிவுள்ளன. இவற்றை நன்கு விளங்கி உள்ள அந்தணப் பெரியோரிடம் வினவிக்கேட்டு அவ்வழி கோவில் வழிபாட்டை நடத்துதல் நலமாகும்.

---

# நெறி கலந்த தொரு நீர்மையினன் சிவன்

மறை பயிலும் நெறிபோற்றும் மாண்பு ஒன்றுதான் இறைவனைச் சேரச் செய்வது. நீதியால் ஒழுக அறியார் வேதம் கற்றும் பயனில்லை. கற்றவர் என அறிதற்கு அவர் ஒழுகும் நெறிதான் முக்கியம். முதல்வனை நாம் செய்யும் தொண்டு மூலம் தான் பெறலாம் என்பது பெரியோரது துணிபு. நெறி ஒழுகாதாரின் வாக்கிலும் நெறி நின்றாரின் வாக்குகள் அமுதம் போல்வன.

திருஞானசம்பந்தப் பெருமான் திருப்புகலூரில் சென்று தங்குகின்றார். அவருடன் திருநாவுக்கரசர் பெருமானும் தங்குகின்றார். இருவரும் திருப்புகலூர் வர்த்த மானீச்சரத் திருந்த கடவுட்கு அடியார் புகழ்ந்து ஏத்த அழகிய மலர் மாலையால் அணிவிளங்கிட பூமாலைத் திருப்பணி புரியும் அந்தணர் பெருமான் முருக நாயனாது திருமடத்தில் தங்கியருளுகின்றார். அப்பொழுது அங்கு தெய்வ நெறி நின்ற திரு நீல நக்கநாயனர் சிவனடியார் ஒருவர்க்கு அமுதூட்டி பின் உண்ணும் விரதம் பூண்ட சிறுத்தொண்ட நாயனர் இன்னும் சீலத்தால் உண்மை நிலை பெற்ற தபோதனர்கள் அடியார்கள் அனைவரும் கூடிக் கொள்கின்றனர். இந்த திருக்கூட்டச் சிறப்பு பேசரிய பெருமையாகின்றது. தங்கள் காலத்தை நன்றாக உய்யுப்படி கொண்ட அத்தகை பெரிய அடியார்களுடன் சம்பந்தப் பெருமான் அளவளாவி அன்புற்று ஏகமாம் சிவ மெய்ஞான இன்ப அநுபூதியில் அடியாருடன் கலந்தருளினர்.

அவ்வாறு அங்கு தங்கிய போது திருத்தொண்டின் மேன்மையே தெளிகின்றார்கள். இந்த தொண்டின் மேன்மை பற்றிய சிறப்பின் பெரும் போற்றுதலாக அக்கூட்டம் அமைகிறது. சிவன் எப்பொழுதும் நல்ல நெறியில் அமர்பவன் என்றது தெளிவுறப் படுத்தப்பட்டது. பூவும் நீரும் புகையும் சாந்தும் இவையே நல்லனவாகக் கொள்ளப் பெறுகின்றன. இறைவனை அல்லும் பகலும் தொழுதலால் வரும் நயமும் திருப்புகலூர்த் தலத்தின் பெருமையும் எடுத்து பாராட்டுடன் மொழிகின்றனர். இங்கு எம்பிரானைக் கும்பிடும் கொள்கையில் தலையான செயலாக நின்று எடுத்து மொழிகின்ற போதுதான் குறிகலந்த இசை பாடலினன் நசையால் இவ்வுலகம் எல்லாம் நெறிகலந்த ஒரு நீர்மையினன் எனத் தொடங்கி திருப்புகலூர் பெருமையையும் சீலத்தின் சிறப்பையும் அடியார்க்குத் தெளிவுற வைக்கின்றார். இன்னுமொரு பாடலில் பணிவாரை மெய்யநின்ற பெருமான் ''அருள்பேணி பொய்யிலாத மனத்தார் பிரியாது பொருந்தும் புகலூர்'' என்றும் போற்றுதல் காண்க! அந்தோ எம் இனம் உய்ய சிலராகுதல் இதன் தன்மை தெளிவாரோ! இன்னமும் அப்பாடலில் "அருள் தந்து எம் கள்ளம் ஆர்ந்து கழியப் பழி தீர்த்த கடவுள்" என்றும் சொல்லுகின்றார். உண்மை எது நன்மை எது என உணராத போலி மனிதரின் மணி மொழிகேட்பீர் பிரசுரிப்பீர் இம்மொழிகள் உமது காசு பெருக்கும் தொழிலிற்கு உதவாது போலும்!

எந்த உலகில் எவர் எப்படி வாழ்ந்தாலும் நெறிதான் மிக முக்கியமாவது. நெறியில்லாத வாழ்க்கை எக்காலமும் சிறப்புற்றதில்லை. இந்த நெறியின் அவசியத்தை உலகில் எடுத்து மொழிதல் பெரும் சிவதொண்டு. இந்த நெறிதான் மேலானது என நாயன்மார் யாவரும் ஏக சிந்தையுடன் மொழிந்து விட்டார்கள். இந்த நெறியைத் தான் சைவ சீலம் என்று நாம் சொல்கின்றோம்

இந்த நெறிகள் யாவும் பேச்சளவில் இயங்கி நிற்பனவே. அன்றி செயலளவில் காணமுடிவதில்லை. இந்த சீலத்தை மெள்ளத் தெளிந்து அறிவார் காலத்தையும் வென்றிருப்பார். ஏனையோர் வெறும் கர்மிகளாகி மரிப்பார்கள். இதனை உணர்ந்து தான் மாணிக்கவாசகரும் நெறியல்லா நெறிதன்னை நெறியாக நினைவேனை எனமொழிகின்றார். இதனையே திருநாவுக்கரசரும் அறியாது அடியேன் அகப்பட்டேனை அல்லல் கடல் நின்றும் ஏறவாங்கி நெறிதான் இது வென்று காட்டினனை என்கின்றார். கந்தபுராணத்து கச்சியப்பரும் சீலமில்லவர்க்குணர ஒண்ணாத சிற்பரன் என்று கூறியருளுகின்றார். இப்படியாக பலரும் ஏற்றுக்கொண்டது நெறியேயாகும். ஆதலின் அருமையான நெறியைப் பேணி கிடைத்த மனிதப் பிறப்பில் உய்தி அடைவோமாக.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அறத்திலும் மறம் இருக்கலாமா

**உயர்வான எண்ணமுடையார் உணர்வைப் பெருக்கி ஒளியை நாடுவர். உயர்விலாத புகழ் நாடும் பேதையர் ஒலியைப் பெருக்கி ஊரைக் கலக்குவர். அற்பருடைய ஆசை அநேகருக்கு துயர் விளைக்கும். பாற்கடல் மீன் நீரை விரும்பும் அதே போன்று கோயில் பணியிலும் குளறுவதை விரும்புவதா மனிதகுலம்! ஒலியைப் பெருக்கி ஊருக்குக் காட்டுவீர்! உணர்வைப் பெருக்கி உயர்வை நாட்டுங்கள்! ஒலியை வேண்டியபடி பெருக்கலாம் அருளையும் அவ்வாறு செய்யலாமோ?**

தருமம் தான் மேலானது என்று எல்லாப் பெரியோரும் ஏக மனதாக ஒப்புக்கொண்டனர். மகரிஷகன் கண்டமார்க்கமும்தருமவழி தலைநின்ற சன்மார்க்க நெறியாகும். இந்த சன்மார்க்க நெறி தான் மனிதனுடைய மூர்க்கக்குணத்தைப் போக்கி சாந்தியை வரப்பண்ணும். தவத்திற்கு வாய்த்த தொருநல் நிலையையும் வகுத்துக்கொடுக்கும்.

தருமம் செய்வது என்றால் என்றோ ஒரு நாள் எல்லார்க்கும் சோறவித்துக் கொட்டுவது அன்று. வாழ்வில் எம் செயல்யாவும் தருமவழி அமைதல் தான் தருமம். இது சன்மார்க்க நெறி ஒழுகலால் தான் வரும்.

உதாரணமாக தருமத்திற்கு எம்முன்னோர் அறம் என்று மொழிந்தனர். அறத்திற்கு உரிய செயலாக அழுக்காறு அவா வெகுளி இன்னாச்சொல் இவையாவும் ஆகாது என்றனர். இது உண்மை. எமது வாழ்வில் நாம் செய்திடும் செயல்யாவுமேஎண்ணிப் பார்த்தால் அறத்தின் தொடர்புடையன. இறைவன் சந்நிதியில் நாம் நடத்திடும் செயல் கிரியை யாவும அறத்தின் இயல்புடையது.

அறத்தின் செயலுக்கு இயந்திரம் ஆகாது. அது அருவருப்பை உண்டாக்குவது, அதை தருமத்தை நன்கு விளங்கிய எந்த ஒரு அந்தணரும் ஏற்கார். அறத்தின் செயலாகும் கிரியாபாகங்கள் யாவும் இயல்பில் அமையவேண்டும். அதில் எந்த விதமான வீம்புச் செயலான ஒலியைப் பெருக்குதல் சொன்னதை இயந்திரமூலம் திரும்ப ஓதப்பண்ணல் ஆகிய இவை செயற்கரிய பாதகங்களாம்.

ஒலி பெருக்கி மூலம் உறுக்காட்டியமுடன் பேசி சிரிக்கவைக்பதும் நல்நெறி ஒழுகுவாரை இரண்டு வடுவார்த்தை சொல்லி கோமாளித்தனம் செய்வதும் இது கடவுள் சந்நிதியில் ஆகாது. இது பற்றி ஒரு கோவிலில் நடந்த அநுபவத்தை கீழே தருகிறேன்.

சில மாசங்கட்கு முன்பு எமது அயலில் உள்ள கோவில் ஒன்றில் கும்பாபிசேகம் நடந்தது. கோவிலில் யந்திர பூசை தொடக்கம் கும்பாபிசேக கிரியைகள் யாவும் ஒலி பெருக்கி மூலம் பல மைல் தூரம் கேட்கும் படி செயல்படப்பட்டது. அந்தணர் முதல் ஆக்குனர் அனைவரும் ஒலி பெருக்கி மயமாகவே செயல்பட்டனர். கும்பாபிசேகம் முடிந்து பாராட்டுவிழாக்கள் கலை நிகழ்ச்சிகள் நடைபெற்றன. கலை நிகழ்ச்சிகளில் வில்லுப்பாட்டும் இடம் பெற்றது. அந்த வில்லிசைக்குழுவிற்கு தலைமை தாங்கி நடத்தியவர் ஓர் அந்தணப் பெருமகனார். அவர்கள் வில்லின் இசையால் உலகறியச் செய்தது காமாட்சி கலியாணம். அதற்கு முன்பு சொற்பொழிவுகள், பின்னர் மேளவாத்தியங்கள் அதன் பின் தான் வில்லிசை. அந்த நேரம் ஒலிபெருக்கி ஓசை அவ்வளவு என்னைத் துயருறுத்தவில்லை. எனது இரவுவேளை உணவை அருந்தி நான் படுக்கைக்குச் சென்று நித்திரை செய்திட; நித்திரையில் ஏதோ என் காதைத் துளைப்பது போன்ற இரைச்சல் கேட்டலும் திடுக்கிட்டு இதென்ன என்று எழுந்தேன். வேறொன்றுமில்லை கோயில் ஒலிபெருக்கிக் குளாயின் ஓலமிட்ட சத்தம். வில்லுப்பாட்டு நடக்குது. காமாட்சி கலியாண வீட்டு வைபவம். அப்பாடா அதை ஏன் பேசுவான்! சிரிப்பின் ஒலி கைதட்டல் ஒலி இவையாவும் விமரிசகரின் உச்சத் தொனியுடன் ஒலி பெருக்கியின் உச்சவேகத்தில் செயல் பட்டன. உண்மையாக நான் அதைக் கேட்க சகிக்க முடியாமல் போனேன். மனம் பெரும் அந்தரம். ஏன் என்றால் கொஞ்சம் பெரிய மனிதரோடு கூடிப்பழகின படியால்; அவர்கள் என்னை இந்தமாதிரி நிலைக்கு வரவிடாமல் இறைவன் புகழை பத்திமையாகவும் அன்பாகவும் அளவாகவும் இணக்கமாகவும் பேசும்படி பயிற்றப்பட்டிருந்தபடியால் என்மனம் உண்மையில் இந்த ஒலிபெருக்கி உளறலைக்கேட்டு சகிக்கமுடியவில்லை. என் செய்யலாம். இந்தமாதிரி நிலை ஒரு கோவிலில் மட்டுமா? பொதுவாக எல்லாக் கோவிலிலுமே உள்ளது. மனிதன் கத்துகின்றான். பெண்கள் ஒப்பாரி வைக்கிறார்கள். ஆனால் அதைச்சகித்திடலாம். ஏனென்றால் அது இயல்பில் உள்ளது. ஒலிபெருக்கியில் வந்தால் எப்படியிருக்கும்? அவர்களுடைய அறியாமையைக் குறித்து வருத்தமுடன் அகன்று வேறு இடம் போக வேண்டியது தானே தருமம்.

கோவில் காரியம் எதையும் செய்யட்டும் என்று உண்மையாக நிம்மதியுடன் என் மனத்தை ஒருவழிப் படுத்த முடியவில்லை. காதிற்குள் பஞ்சை அடையலாம் என்றாலும் அது முடியாது. ஒருவருக்கும் என் செயல் அறியாதபடி அந்த நடு இரவு வேளை (2மணி வரையில் இருக்கும்) எழுந்து எனது சையிக்கிலையும் எடுத்துக் கொண்டு எனது கிராமத்தை விடுத்து அயலில் உள்ள ஓர் கிராமத்துச் சென்று பல மணி நேரம் மெயின் வீதியில் உள்ள வைரவப்பெருமான் ஆலயத்து தங்கி இருந்தபின் விடியும் காலையில் என் இல்லம் வந்தேன். இது குறித்த ஒரு கோவிலைப் பற்றியதல்ல. பெரும் பாலும் எம் யாழ்பாணப் பகுதியில் உள்ள எல்லாக் கோவிலிலுமே இந்த நிலை. குழந்தைப்பிள்ளைக்கு விளையாட்டு சுண்டெலிக்குச் சீவன் போகுது என்றபழமொழிபோல் பல கோவில்களில் முகட்டில் கட்டின ஒலிபெருக்கி போடும் சத்தம் காணாது என்று ஒவ்வொரு லைற்போஸ்ற்றிலும் கோன்கட்டி ஒரே குளறல். அதோடு வில்லுப்பாட்டு துவங்கினால் பிறகு போசவேண்டியதில்லை. அப்பாடா அந்த ஓசையை என்ன செய்யலாம்! ஓசைக்கும் ஓர் அளவல்லவா உண்டு! மிஞ்சிக்கதறுவது உண்மையில் சாந்திக்குரிய இறைவன் இருப்பிடத்தா நடைபெறவேண்டும்! இறைவன் இப்படியான ஓசைகேட்டு மகிழ்ந்து கூடகாசு சம்பாரிக்க அருளுவார் என்பதாலா இந்த அநியாயக்குளறல் வேண்டியிருக்கிறது. இறைவனை கல்லு அல்லதுசெம்பு என்று நினைந்து தானே இதைச் செய்கின்றனர்,

இதன் தன்மையை நீள நீங்களும் சிந்தித்து தெளியுங்கள். இந்த வகை மிகப்புனிதமுடைய கோவில் வழிபாட்டில் மிலேச்ச நாகரீகத்தின் தொடர்புடைய ஒலிபெருக்கி ரேப்றைகோடர் போன்றன பாவித்தல் மிகவும் பாதகமாகும். இறைவனுடைய அருளின் சிறப்பை நன்கு விளங்கி பக்குவமுடன் திருவருள் கடாட்சத்தை பேணிடும் அடியார் கோவில்களில் ஓலமிட்டு கதறுகின்ற ஒலிபெருக்கியை சீ இது அநியாயமென்றே விலக்கிடுவர். ஓலமிட்டுக் கதறி ஊருக்கு உபதேசித்து மக்களை முன்னேற்ற முடியாது. கோயிலின் புனிதத்தை நல்நிலையடையச் செய்ய முடியாது! எவராலும் முடியாது என்று ஆணையிட்டுச் சொல்வேன்.

இப்படியான ஓர் அவலச்சத்த நிலை அந்த கோவில்களில் நிகழும்போது உண்மையாக என் மனம் என்பாட்டில் நினைத்துக் கொண்டது எப்படியெனில் ஐயோ இதென்ன அநியாயம். சாந்தியைப் பெற வேண்டிய இடம் கோயில். மன அமைதியைப் பெறுதற்கே கோவில் செல்கின்றோம். ஊரின் நல்வாழ்விற்கு கோயில் நிகழ்ச்சிகள் இடம் பெறுவதை விடுத்து மனிதன் அந்தரப்பட துயர்பட ஏங்க இப்படி கோயில்களில் விழாக்கள் நிகழ்ச்சிகள் நடைபெறவா வேண்டும்? கோவில் இல்லா ஊரில் குடியிருக்க வேண்டாம் என்றாரே முதியோர்? இப்பொழுது கோயில் உள்ள ஊரில் குடியிராதே என்ற நிலைக்கல்லோ வந்து விட்டோம். இதைப் பற்றி யாரிடம் சொல்லலாம்! யாரிடம் பேசலாம்! ஊருக்கு உபதேசம் செய்யும் பெண்கள் ஆண்களிடம் அநியாயம் என்று சொன்னால் அவர்கள் பாடு ஆபத்தே! ஐயோ இதிலே கத்திக் கத்தி பழகின அவர் வயிற்றின் கஞ்சிக்கு நாம் அடிப்பதா? இப்படி எல்லாம் அமைதியுடன் அடக்கமுடன் நிகழ்ச்சிகள் நிகழவேண்டிய அறநிலையங்கள் அடங்காத பிடாரி கத்துவது போல் தொழில் பட்டால் நாட்டு மக்களுக்கு என் விளையுமோ? தமிழினமான நாங்கள் அதிலும் சைவர்கள் எனப்படும் நாம் இப்படிச் செயல் படுகிறோம். இந்த ஒலிபெருக்கியைக் கண்டு பிடித்த மேல் நாட்டு வெள்ளையன் கூட இதை எவ்வளவு கணிசமாகப் பாவிக்கின்றான். அவனும் ஊரடங்கக் கத்துறானா? சுற்றாடலில் வாழும் ஒருவரையும் தனது தொழிலைச் செய்ய விடாதபடி ஓவென்று கத்துவது வழிபடா? இதை எந்த ஆகமம் செய்யும்படி சொன்னது? இது அறத்தின் பாற்பட்ட வழிபாடா? அல்லது அதர்மத்தின் வழிப்பட்ட வழிபாடா?

அழுக்காறு அவா வெகுளி இன்னாச் சொல் நான்கும் அறத்திற்கு ஆகாது என்று முது மொழிகள் இருப்ப அறநிலையங்கள் அவாவும் இன்னாச் சொல்லும் நிரம்பிய இவற்றைச் செய்யலாமா? இதனைப் பெரியோர் சிந்திப்பது நலம் நான் தவறாக இருந்தால் என்னைத் தண்டியுங்கள்.

## தீபத்திற்கு ஓர் வாழ்த்து

தான் பெற்ற இன்பம் பெறுக இவ்வையம்
எனும் நல் வாக்கை இதயத்தே கொண்டு
நல்லையா என்னும் நல்லாசான் செய்யும்
எல்லோர்க்கும் பயன்தரு நற்பெருஞ் சேவை
சந்திரதீபம் எனும் பெயர் தாங்கியே
செந்தமிழ் ஏடாய்ச் சிறப்புற ஈழத்தில்
நல்வழி காட்டி நற்பேறடைந்திடவே
நல்லையா ஆசானும் நாடும் நலம் வாழி.

சைவமும் தமிழும் தழைத்தினி தோங்க
சிவப்பெருந் தொண்டாற் சிறப்பு மிகுந்து
தவமும் தர்மமும் தரணியிற் துலங்க
திருவருள் துணையது அனைவர்க்கும் சேர
பெருந்தொண்டாற்றும் பெரியார்வாழி.

கே : தியாகமணி
கே கே எஸ் வீதி
யாழ்நகர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தாயே ஆகி வளர்த்த தலைவா போற்றி

எமது தாய் இருக்கின்றாள் அவளைப் போன்று எம் மீது இரக்கமுள்ள இன்னும் ஒருவரை நாம் தேடலாமோ? அல்லது காணலாமோ? அது எவராலும் முடியாதது! இயந்திர சாதனத்தால் மிகுந்து எல்லாம இயந்திர மயமான பெண்கள் கூட தம் புதல்வரிடத்து சிறி தேனும் பற்றுக் கொள்வர், இது இயல்பில் வளரும் பற்று. இது இரும்பின் தன்மை போன்றது அன்று, இளகிடும் நெஞ்சுடையது.

ஒரு தாய் தனது பிள்ளையிடத்து கொண்ட அன்பினால் அப்பிள்ளை மீது மிகு அக்கறை கொள்கின்றாள். பிறந்த நேரம் தொடக்கம் தனக்குற்ற பிரசவவேதனை நோக்காட்டிலும் பிள்ளை மீதே அன்பு பெருக்கம் வளர்கிறது. அது அழுதபோது அது சலம் விட்டால் முறுகிநெளிந்தால் நோயுற்றால் இப்படியான காலங்களில் எல்லாம் அக்குழந்தை தன்னை அறியாத பருவத்து தானே அக்கறை கொண்டு அக்குழந்தைக்கு வேண்டிய பரிகாரம் செய்து அதைப் பாதுகாக்கின்றாள். நேரத்திற்கு உணவு நேரத்திற்கு எண்ணை குளிப்பு இத்தனையும் பரிபக்குவமாகச் செய்து அப்பிள்ளை அழுதால் தான் 'அன்புகாட்டி பிள்ளையின் நல்நிலைக்காகச் சில கால் வெருட்டி அடித்தும் கூட; தன்பிள்ளையை எவ்வளவு அக்கறையாக வளர்க்கின்றாள். தன்பிள்ளை நல் ஒழுக்கமுடைய வனாக வளர்ந்து தங்கள் குடும்பத்தில் சிறந்தவனாக வரவேண்டு மென்பது நோக்கம்.

இப்படியாக தாய் வளர்த்திடும் தன்மைபோல் சிவனும் தம்மை வளர்த்தருளினான் என்கின்றார் மாணிக்கவாசகர் பெருமான். இத்தாயின் வளர்ப்பு உலகில் உடம்புடன் வந்தபின் தான். ஆனால் அந்த குருபரனாய சிவனின் வளர்ப்பு உடம்பு தாய்வயிற்றில் உருவேடுக்கும் நிலையில் இருந்து ஆரம்பமாகிறது என்கின்றார்.

முதலில் பிறவியின் இயல்பு தெரிவிக்கப்படுகிறது. எவ்வாறு தன்புதல்வரை ஒருதாய் கெட்டநடத்தை உடைய பிள்ளைகளுடன் சேரவிடாது தன் பிள்ளையை பக்குவமான ஓர் நிலையில் வைப்பாளோ! அதேபோன்று சிவனும தனது குழந்தையான தன்னை வேறு வேறு பிறவிகளாய யானை முதல் எறும்பு ஈறாய விலங்கின் தொகுதியில் பிறந்து உழலவிடாது காப்பாற்றி மனித உடலில் தோற்றுவித்தான் என்கின்றார். அவ்வாறு தோற்று விக்கும் பொழுது தாயின் வயிற்றில் கருவாகத் தொடங்கிய நாள் முதல் அதுவளரும் வரையும் எத்தனையோ ஆபத்துகள் நிகழ்வன. இவை கிருமிகளின் போராட்டம் இருமையாகும் நிலை பின்னர் அது ஒருமையாகும் நிலை மதம பேரிருள் மூச்சு ஊறு பூமியின் தொடர்பு கட்டம் துயரம் பிரசவம் ஆகும் துயரம்யாவும் மாதம் தோறும் நிகழ அவையில் தப்பி எழுந்துவந்து பின்னர் பூமியில் பிறந்து தவழ்ந்து நடந்து எழுந்து ஓடி வளர்ந்து வருங்கால் உள்ள ஆபத்துகளை கண்ணின்று தான் கண்டு நீக்கி பின்னர் கல்விபயிலும் போது அதற்குரிய சங்கடங்கள்; வறுமையின் வாட்டம்; செல்வத்தின் திமிர்; இளமையின் வனப்பு மிககூர பெண்கள் பால் கொள்ளும் மோகம்; இவையான இத்தீங்குகளின் நின்று நீங்கச் செய்து தன்னை நினைவித்து அதனால் விளையும் இன்பப்பெருக்கை உணராமல் உணர்வித்து அதனை நாடும் படியே தாகம் கொடுத்து அதனால் உலகத்து வளரும் இச்சை நீக்குவித்து உலகில் சமயவதிகள் சொல்வது அதன் தன்மையில் நான் போய் சிக்கிமாளாமலும் பாதுகாத்து என் நெஞ்சில் இடம் கொண்டு எவ்வளவு சிக்கல்களால் என்னை நீக்கி இன்றோர் மாண்புடையேனாக, அடியேன் இருக்கும் வகை அருள் புரிந்தான் எம் கடவுள் என மிகவும் திடமுடன் சொல்கின்றார் மாணிககவாசகர் தமதுபாடலில்

இப்படி சாருதற்கரிய பரம அதிசய மாம்படி தான் திருவருள் நிலை கைகூடியபின் என்ன ஆனார் என்பதையும்; அதற்கு முன்பு எல்லோரும் போலத்தான் நடந்திருந்தால் எப்படி ஆயிருப்பேன் என்பதையும் தமது அப்பாடலாம் போற்றித்திருவகவலில் எடுத்துச் சொல்கின்றார்.

குழந்தைப்பிள்ளை ஓர் வயது இரண்டு வயதில் அது என்ன மாதிரி பிற ஆபத்து விளங்காமல் நடந்தால் மாட்டிற்குகிட்டப் போனால் போகாதே இடிக்கும் என்றும் ரோட்டால் தனியே போனால் ஐயோ போகாதே வண்டிவரும் என்றும் உணர்ந்து அதன் தாய் பேணுவாள். குழந்தைக்கு இந்த அபாயம் பற்றி விளங்காது. இதே போன்று தான் இறைவனும் எம்மை அறியாது எமக்குவரும் இன்னல்களைத்தான் உணர்ந்து நீக்குகின்றான்.

இன்பம் மிகுந்த உலகில் இருக்கும் துணையும் உலகப்பற்றே மிகுவது. குழந்தை அறியாது நடுரோட்டால் மகிழ்வுடன் செல்வது போன்று நாமும் உலகில் இச்சைவசப்பட்டு அடுத்து என்ன என்று உணராதே செல்கின்றோம்.

இந்த முன்யோசனை பெறமுடியாத நிலையில் ஆபத்துகள் பின்னர் காலத்து வந்து கூடிட அதனை ஏற்று அநுபவித்தாலும் நாம் நல்நிலை பெறமுடியாது திரும்பத்திரும்ப அதே பிழையைத் தான் விடுகின்றோம். இந்த அறியாமை மிகுந்த எம் வாழ்வில் எப்படி தனக்கு ஈசன்கை கொடுத்து உதவினான் என்பதையும் சொல்கின்றார், மாணிக்கவாசர் அப்படாலில்

காமம் குரோதம் கோபம் மோகமாதி குற்றங்கள் வரவர நீ அவற்றை உணரச் செய்து எவ்வாறு நீக்குவித்தாய். பின்னர் உன் திருவடிக்கே அன்பாக்கி முற்றிலும் என்னை உனக்கு ஆளாக்கினாய் என்றும்; நாடவர் பழித்துரையையும் பூணுதுவாக ஏற்று உய்யக் கொண்டு என்றும் சாய்வு கொள்ளாத அன்பினால் தழைத்து நிற்கும் அடியாரை அப்பன் ஆண்டு கொள்ளும் அற்புதமும் அவன் தாயிலும் நல்ல வனாய் சார்ந்தார்க்கு அருள் புரியும் பெருமையும் போற்றித் திருவகவலில் பேசுகின்றார் மாணிக்கவாசகர். இதனை நன்கு தெளிந்த சிந்தையுடன் ஒதிப்பாருங்கள்.

## இந்திரன் பழி தீர்த்த திருவிளையாடல் - தவத்தின் பெருமையும் அவத்தின் சிறுமையும்

வச்சிரப் படை புதிது பெற்ற இந்திரன் தேவப் படையுடன் எழுந்து சென்று மறுமுறை விருத்திரா சூரனோடு போரிடப் போனான். அந்தக் கொடிய அசுரனும் பெரும் படையைத் தானும் சேர்த்துக் கொண்டு வந்து இந்திரனுடன் எதிர்த்து போரிட்டான். இப்போர் மிகு உக்கிரமுடன் நடைபெற்றது. இந்திரனும் விருத்திரா சூரனும் பலம் வாய்ந்த தெய்வப் படைகளைச் செலுத்திப் போரிட்டார்கள். அப்படி போரிட்டு வருங்கால் விருத்திரா சூரன் அவற்றால் அழியாதிருப்ப; தன்னுடைய வச்சிரப்படையை எடுத்து வீசிட இந்திரன்முற்படலும்; அது கண்ட விருத்திரன் இப்படை என்னைக் கொல்லும் என அஞ்சி ஒடிச்சென்று கடலில் வீழ்ந்து அதனிடம் ஒளித்தான்.

தன்கையில் எடுத்த வச்சிரப்படையை இந்திரன் நீக்கி விருத்திராசூரன் எங்குற்றானென்று தேடிக் கடல் எல்லாம் திரிந்தான். நீரினுள் விருத்திரனைக் காணமுடியவில்லை. இதனால் கவலை மிகுந்த இந்திரன் பிரமதேவரிடம் சென்று தனது நிலையை விளம்பிட அது கேட்ட பிரம தேவர் சொல்வார் இந்திரனே அகத்திய முனிவரிடம் உன் குறை சென்று நீ விண்ணப்பிப்பாய். என்று இதனை பிரமதேவர் சொல்லலும் அது கேட்ட இந்திரன் உடன் எழுந்து சென்று அகத்திய முனிவனை அடைந்தான். அகத்திய முனிவர் இந்திரனை நோக்கி என்னிடம் நீ வந்தது என்ன காரணம் மொழிக என்றலும் இந்திரன் சொல்வான். ஐயனே விருத்திரா சூரன் கடலில் ஒழித்தனன் அவனை எங்கும் தேடிக்காணேன். எல்லாவற்றையும் உணர்கின்ற எந்தை பெருமானுக்கு யான் எடுத்து மொழிகின்ற பிற வார்த்தை என்ன? என்னுடன் போரிட முடியாது கடலில் ஒளித்த விருத்திரா சூரனுடைய உயிர் போவதற்கும் அவனால் நேர்ந்த எனது துயரம் நீங்கும் படியும் கருதி உம்மிடன் இங்கு வந்தேன் எம் பெருமானே என்றான்.

என்று கூறிப்பணிந்து நிற்கும் இந்திரனது துயரம் தீர்க்கும் படி திருவுளம் கொண்ட அகத்திய முனிவர்; அவரோவெனின் ஐந்து புலன்களையும் வென்றவர். நெடிய விஷ்ணுவினுடைய உருவைச் சிவலிங்க வடிவாக்கியவர். அத்தகைய அகத்திய முனிவர் அறிவினுள் அறிவாகி ஆநந்தமயமாகி நின்ற கண்ணுதற் பெருமான் திருவுருவை தமது மனதில் தியானித்துக் கொண்டார். அவர் அருளால் வஞ்சகனான விருத்திரா சூரன் இருந்த கடல் நீரைச் சுருக்கி உழுந்தளவாக்கி தனது திருக்கையில் எடுத்து தாம் உண்டருளினார். அப்படியான இது ஒரு அதிசயமென்று நினைக்கின்றீர்கள்? இல்லை இல்லை. இளம்பிறை சூடிய சடையுடைய சிவன் திருவடி வணங்கி அருள் பெறும் அடியார் படைத்தல் காத்தல் அழித்தல் எனும் இவ்வுலகில் நிகழும் செயலை தம் ஆணைப்படி நடத்திடவல்லரே!

கடல் நீரை உண்டிட கடல் வற்றியது. அப்போது அதனுள் ஒளித்திருந்து தவம் செய்திருந்த விருத்திரா சூரனை வெளிப்பட இந்திரன் கண்டான். தவம் செய்தான் என்பதையுமே உணராது தன் வச்சிரப் படையை எடுத்து வீசி விருத்திராசூரனை இந்திரன் கொன்றான். எதிரியானாலும் தவம் செய்திருந்தானைக் கொன்ற பாவத்தால் இந்திரனைக் கொடியபிரமகத்தி பற்றிக் கொண்டது; இப்பொழுது இந்திரனால் ஒன்றும் செய்ய முடியவில்லை. பொல்லாத கொடு நோய்போல பிரமகத்தி தொழிற்படலும் அதனைத்தாங்க முடியாத இந்திரன் தனது உருவை மறைத்து தாமரைப்பூவின் தண்டினுள் ஓடிச் சென்று ஒளித்தான்.

இந்திரன் ஒளித்திடலும் தேவ உலகில் அரசன் இல்லை. ஆதலால் இந்திரனைத் தேட முடியாது தேவர்கள் தமக்கு ஒருவேறு அரசனைக் கொள்கின்றார். நகுடன் என்பது அவனது நாமம. அந்த நகுடன் இந்திரபதவி பெற்றதும் தனக்கு நிகரிலாத பெருமை கொண்டனன். அதனாலே இந்திரன் மனைவி இந்திராணியை விரும்பி தனக்கு மனைவியாகும் படி எண்ணினான். அந்த எண்ணத்தால் இந்திராணியிடம் தூது அனுப்பினான். அவள் பயந்து இவனது தீய எண்ணத்தை நீக்கிட வழி சொல்லும்படி குருவான வியாழ பகவானை அணைந்து என் தெய்வமே! இந்த பழி நின்றும் பாதுகாக்க வேண்டும் என வேண்டினாள். குருவான வியாழதேவன் அவள் மொழி கேட்டுச் சொல்வார் இந்திராணியே தேவர்கள் அவசரப்பட்டு நகுடனை இந்திரனாக அரசிருத்தனர். நீ பட்டத்துத் தேவி என்ற முறையால் அவனை ஏற்க வேண்டிய நிலை வந்துள்ளது. ஆனால் அவன் இந்திரனுக்குரிய முறை பெறுவானாகில் ஏழு முனிவராலும் சிவிகையில் அவனை வைத்து காவப்படல் வேண்டும். அப்படி ஏழு முனிவரும் சிவிகையில் அவனை ஏற்றி உன்னிடம் அவனைச் சுமந்து வருவரேல் நீ அவனை ஏற்றுக் கொள். அந்த நிலையில் அவன் வந் ால் உன்பால் கற்பு பங்கப் படும் தோஷம் வராது என்றார்

குருவான வியாழ பகவான் சொல்லிய வார்த்தையை இந்திராணி ஏற்றாள். தன் அரண்மனை சென்று புதிய இந்திரனான நகுடனை எழு முனிவர் காவும் சிவிகையில் வந்தால் தான் அவனை கணவனாக வரவேற்க முடியும் என தூது சொல்லி விடுத்தாள். அது கேட்ட நகுடன் என்னும் புதிய தேவ உலக அரசன் சிவிகையில் தன்னை ஏற்றி இந்திராணியிடம் சுமந்து செல்லுமாறு கேட்கின்றான். அகத்தியர் முதல் எழு முனிவரும் மனிதரில் இந்திர பதவி பெற்ற அவனைச்சுமந்து செல்ல ஏற்கின்றனர். அதன் படி அவனைச் சிவிகையில் சுமந்து செல்கின்றனர். அப்படிச் அவர் செல்லும் போது நகுடனுக்கு இந்திராணியின் அழகும் அவளுடன் போய் அநுபவிக்கப் போகின்ற இன்ப நிலையும் எண்ணுகிறான். அந்த இன்பத்தைப் பெற அவசரம் மேற்படுகிறது. உடனாகத் தன்னை யார் எக்காரணத்திற்காகச் சுமந்து செல்கின்றார் என்பதை மறந்தான். அந்தோ உலகருள் காரணத்திற்காக மிசுப் புனிதமுடைய இவர்கள் என்னைச் சுமக்கிறாரே என்பதையும் மறந்தான். என்னிடம் உள்ளது போன்ற இந்த இச்சையை இவர்கள் அடக்கிய புண்ணியர் என்பதைக் கூட எண்ணமல் அவரை நோக்கி தனது இந்திரனுக்குரிய கௌரவ மொழியால் (சர்ப்ப) கெதியாய்ப் போங்கள் என்றான். அந்த வாக்கை அகத்தியப் பெருமான் கேட்டார். இதென்னடா இவன் நாங்கள் இவனை கௌரவத்திற்குரிய ஒருவனாகக் கொண்டு மதிப்புக் கொடுக்க எங்களை இப்படி மொழிகின்றானே!

என்று உடனாக என்னடா நகுடனே எங்களை சர்ப்பம் என்றே நினைந்தாயோ! சிக்கிரம் செல்லும் படியா சொல்கின்றாய். சரி நீயே சர்ப்பமாகுக (பாம்பாகுக) எனச் சாபமிட்டார். அத்துடன் நகுடன் தனக்குற்ற இந்திர பதவி கெட்டுப் பாம்பானான். ஆதலால் அற்பனானவன் மேலான செல்வத்தைப் பெற்றால் அந்தச் செல்வம் எப்பொழுதும் அவனுக்கு பகையாகுவதன்றி ஒருபோதும் நன்மை தராது. இதை நாம் நன்கு உணர்ந்து கொள்ளல் வேண்டும். செல்வச் செருக்கு தீவினையை செய்யச் செய்யும், அல்லல் கடலுள் அமிழ்ந்தச் செய்யும். விழுந்து எழும்பினாலும் உய்திதராது. ஆன படியால் பெரியோர்கள் செல்வத்தை வேண்டா மென்று அருவருத்துத் தள்ளி உள்ளனர்.

(தொடர்ச்சி அடுத்த இதழில்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# செந்தமிழின் ஆகமம் திருமந்திரம் உய்வுதரும் உபதேசம்

## அவையடக்கம்

ஆரறி வார்எங்கள் அண்ணல் பெருமையை
ஆரறி வார்இந்த அகலமும் நீளமும்
பேரறி யாத பெருஞ்சுடர் ஒன்றதின்
வேரறி யாமை விளம்புகின் றேனே.

எல்லார்க்கும் முன்தோன்றிய எம் அண்ணல் சிவன் பெருமையை ஆர் அறிவார். அவன் அருளால் பரந்த இந்த பிரபஞ்சத்தின் அகலத்தையும் நீளத்தையும்ஆர் அறிவார். பேர் அறியாத பரஞ்சுடர் ஒளியாய சிவன் ஒன்றதின் மூலம் எங்கு என்பதை அறியாது நானும் அவர் பெருமை சொல்கின்றேனே. 127

பாடவல் லார்நெறி பாட அறிகிலேன்
ஆடவல் லார்நெறி ஆட அறிகிலேன்
நாடவல் லார்நெறி நாட அறிகிலேன்
தேடவல் லார்நெறி தேடகில் லேனே.

அவனைப் பாடவல்லாருடைய வழியாக நானும் பாடஅறிய மாட்டேன். அவனை உணர்ந்து பரவசமாகி ஆடவல்லாருடைய வழியில் நானும் ஆட அறிகிலேன். அவனை நாடிக் கொள்வாரது நெறி யாது என நானும் நாட அறிகின்றிலேன். அந்த அருள் தேட்டத்தை தேடவல்லமை உடையார் வழி பின்பற்றி நானும் தேட அறிகிலேன். 128

## குரு பரம்பரை

நந்தி அருள்பெற்ற நாதரை நாடிடின்
நந்திகள் நால்வர் சிவயோக மாமுனி
மன்று தொழுத பதஞ்சலி வியாக்ரமர்
என்றிவர் என்னோ டெண்மரு மாமே.

நந்தியெம் பெருமானது அருள் பெற்ற நாதாக்கள் யாரென நாடப்போனால் சனக நந்தி சனந்தன நந்தி சனாதன் நந்தி சனக்குமார நந்தி (இவர் நால்வரும் பசுப்போல் நீண்ட செவிஉடையவர்) சிவயோக மாமுனிவன் கனகசபையில் நடம் கண்டு தொழுத பதஞ்சலிமுனிவன் வியாக்கிரமமுனிவன்என்றுஇவருடனும் சுந்தரநாதன் எனப் பெயர் கொண்ட என்னுடனும் சேர்த்து எட்டு பேராகும். 129

நந்தி அருளாலே நாதனும் பேர்பெற்றோம்
நந்தி அருளாலே மூலனை நாடினேம்
நந்தி அருளாவ தென்செய்யும் நாட்டினில்
நந்தி வழிகாட்ட நானிருந் தேனே.

எனக்கு கிடைத்த நந்தியெம் பெருமான் திருவருளால் சுந்தர நாதன் என்னும் பெயர் பெற்றோம். அந்த நந்தி அருளாலே மூலன் என்னும் இடையனை அவன் நிலை அறிந்தேன். நந்தியெம் பெருமானுடைய அருள் ஆவது என் செய்யும் என்றால் நாட்டினில் என்னை வர விடுத்து மூலன் உடலில் புகுந்து இருந்து என்குருபரன் நந்தி இப்படி நீ செல் என வழி காட்ட நான் இருந்தேனே. 130

நால்வரும் நாலு திசைக்கொன்று நாதர்கள்
நால்வரும் நானா விதப்பொருள்கைக்கொண்டு
நால்வரும்நான்பெற்றதெல்லாம்பெறுகென
நால்வருந் தேவராய் நாதரா னார்களே.

முன் சொன்ன நந்திகள் நால்வரும் நாலு திக்கிற்கும் ஒருவராய நாதராய் எம்பெருமானுடைய அருள் விளங்க இருந்தார்கள்' அந்த நால்வரும் நாலாவிதமான வேதப்பொருளைக் எம் நந்தியெம் பெருமானிடத்து பெற்றுக் கொண்டு நாலு பேரும் நான் நான் பெற்ற பேறெல்லாவற்றையும் உலகீர் பெறுங்கள் என்று மொழிந்து நான்கு திசைக்கும் அறியொணாத கடவுளராய் விளங்கினார்கள். 131

மந்திரம் பெற்ற வழிமுறை மாலாங்கன்
இந்திரன் சோமன் பிரமன் உருத்திரன்
கந்துருக் காலாங்கி கஞ் மலையனோடு
இந்த எழுவரும் என்வழி யாமே.

நான் பெற்ற தாரக மந்திர வழி முறை பெற்றவர் மாலாங்கன் இந்திரன் சோமன் பிரமஉருத்திரன் கந்துருக்கமுனி காலாங்கி முனி கஞ்சமலையன் என்ற இந்த ஏழு பேராயமுனிவரும் என் வழியாகும். 132

மொழிந்தது மூவர்க்கும் நால்வர்க்கும் ஈசன்
ஒழிந்த பெருமை இறப்பும் பிறப்புஞ்
செழுஞ்சுடர் மூன்றொளி யாகிய தேவன்
கழிந்த பெருமையைக் காட்டகி லானே.

இந்த ஏழுபேர்க்கும் ஈசன் அருள் மொழி உபதேசித்தான். உபதேசம் பெற்றதும் பிறப்பு இறப்பு என்னும் பேதமை ஒழிந்தது. அதுமிகவும் பெருமையானது. சூரியன் சந்திரன் அக்கினி எனும் மூன்றின் ஒளியாகிய தேவனே அவர். ஆனால் அவன் அளவிறந்த தன் பெருமை காட்டான். 133

தத்துவ ஞானம் உரைத்தது தாழ்வரை
முத்திக் கிருந்த முனிவருந் தேவரும்
ஒத்துடன் வேறா யிருந்து துதிசெயும்
பத்திமை யால்இப் பயனறி யாரே.

தத்துவ ஞானத்தை எம்பெருமான் இமய மலையில் இருந்து உரைத்தருளினர். அங்கு முனிவரும் தேவரும் ஒருங்காக முத்தி பெறும் பொருட்டு பிரியாமல் பிரிந்து வேறாய் இருந்து துதி செய்திடும் பத்திமை மேம் பாட்டால் இப் பயன் அறியாது போயினர். 134

## திருமூலர் தம் வரலாறு கூறுதல்

நந்தி இணையடி நான்தலை மேற்கொண்டு
புந்தியின்உள்ளேபுகப்பெய்துபோற்றிசெய்து
அந்தி மதிபுனை அரனடி நாள்தொறுஞ்
சிந்தைசெய் தாகமஞ் செப்பலுற் றேனே.

என் குருவான நந்தியெம் பெருமானது இணையான திருவடியை நான் தலைமேற் சூடிக் கொண்டு மனத்தில் உள்ளும் அதனையே போம்படி செய்து அங்கும் போற்றி செய்து மாலையில் தோன்றும் பிறை சூடிய பெருமான் திருவடி நாள்தோறும் சிந்தை செய்து ஆகமத்தை சொல்லலுற்றேன். 135

செப்புஞ்சிவாகமம்என்னும்அப்பேர்பெற்றும்
அப்படி நல்கும் அருள்நந்தி தாள்பெற்றுத்
தப்பிலா மன்றில் தனிக்கூத்துக் கண்டபின்
ஒப்பில் எழுகோடி யுகம்இருந் தேனே.

சொல்லப் பெறும் சிவாகமம் என்னும் பேரினைப் பெற்றுக் கொண்டும்; அப்படியாக அந்த ஆகமம் வடிவாக நின்று ஓதி ஒழுகுவார்க்கு நல்கிட இறைவனும் நந்தியெம் பெருமானுடைய திருவருள் கடாட்சம் தரும் திருவடிபெற்றுத் அதன் அருளால் கனக சபையில் நடம் புரியும் பெருமானது தனிக் கூத்தைக் கண்ட பின்பு ஒப்பு வேறு காண முடியாத எழுகோடி யுகம் அருள் வசத்தின் நிறைவு பெற்று இருந்தேன். 136

இருந்தவக் காரணங் கேளிந் திரனே
பொருந்திய செல்வப் புவன பதியாம்
அருந்தவச் செல்வியை சேவித் தடியேன்
பரிந்துடன் வந்தனன் பத்தியி னாலே.

நான் இருந்து கொண்ட அக் காரணத்தை இந்திரனே கேள் செல்வம் பொருந்திய புவனங்கட்கு அதிபதியாகிய அரும் தவத்தின் செல்வியைச் சேவித்து அடியேன் பரிவால் என்றும் பத்தியினாலே போற்றி வந்தனன்; 137

மாலாங்க னேயிங்கு யான்வந்த காரணம்
நீலாங்க மேனியள் நேரிழை யாளொடு
மூலாங்க மாக மொழிந்த திருக்கூத்தின்
சீலாங்க வேதத்தைச் செப்பவந் தேனே.

மாலாங்கனே! இங்கு நான் திருஆவடுதுறையில் வந்த காரணம் நீல நிறமான அங்கமுடைய மேனியளாய் உலக முதல்வியாளொடும் எவற்றிற்கும் மூலஅங்கமாக மொழியப் பெறும் திருக் கூத்தின் சீலமே தனது அங்கமாக உடைய வேதத்தைச் செப்ப வந்தேனே. 138

நேரிழை யாவாள் நிரதிச யானந்தப்
பேருடை யாளென் பிறப்பறுத் தாண்டவள்
சீருடை யாள்சிவ னாவடு தண்டுறை
சீருடை யாள்பதஞ் சேர்ந்திருந் தேனே.

நேரான நேர்மை உடையவளாகும் என் அம்மை அவள் நிகரற்ற ஆனந்தப் பேருடையாள். அவள் என்பிறப்பினை அறுத்து ஆண்டவள், சீருடையவள். சிவனது திருவாவடு தண்டுறை எனும்சிவதலத்து அமர்ந்தருளிய சிறப்புடைய எம் பெருமாட்டியின் திருப்பாதம் சேர்ந்து அவன் அருளால் இருந்தேன். 139

சேர்ந்திருக் தேன்சிவ மங்கைதன் பங்கனைச்
சேர்ந்திருந் தேன்சிவ னாவடு தண்டுறை
சேர்ந்திருந் தேன்சிவ போதியின் நீழலிற்
சேர்ந்திருக் தேன்சிவன் நாமங்கள் ஓதியே.

நான் சேர்ந்து இருந்தேன் சிவமங்கையான உமையின் பங்கனைய சிவனை. நான் திருஆவடுதண்டுறை என்னும் தலத்தைச் சேர்ந்திருந்தேன். சிவமயமான அரச மரத்தின் நீழலில் நான் அங்கு சிவநாமங்கள் ஓதிய வண்ணமே சேர்ந்திருந்தேன். 140

அகலிடத்தார்மெய்யை அண்டத்துவித்தைப்
புகலிடத்தெம்மெய்யைப்போதவிட்டானைப்
பகலிடத் தும்இர வுமபணிந் தேத்தி
இகலிடத் தேஇருள் நீங்கிநின் றேனே.

அகன்ற இடமாய இப்பூமியில் உள்ளார் எவர்க்கும் உண்மைப் பொருளானவனை அண்டங்கள் யாவற்றிற்கும் வித்தானவனை. இந்த பூமியிடத்து என் உடல் மேற் கொண்ட பற்றைப் போகும்படி விட்டானை. பகலிலும் இரவிலும் நான் பணிந்து போற்றி செய்து பகைமை பெருக்கும் இருள் இவ்விடத்து நீங்கி நின்றேன். மரணம் என்ற பொல்லாத இருளும் நீங்கி நின்றேன். 141

இந்ததேன் இக்காயத்தே எண்ணிலி கோடி
இருந்தேன் இராப்பகல் அற்ற இடத்தே
இருந்தேன் இமையவர் ஏத்தும் பதத்தே
இருந்தேன் என்நந்தி இணையடிக் கீழே,

இந்த உடம்பினுள் எண்ணிலி கோடி நாள் இருந்தேன். நான் இராப்பகல் என்பதற்ற இடத்தே என்றும் நிலவி இருந்தேன், என் அப்பனது தேவர்கள் போற்றும் பாதத்திடையாக இருந்தேன். என் குருவான நந்தியெம் பெருமான் திருவடியினைக் கீழாக இருந்தேன். 142

ஞானத் தலைவிதன் நந்தி நகர்புக்கு
ஊனமில் ஒன்பது கோடி யுகந்தனுள்
ஞானப்பா லாட்டி நாதனை அர்ச்சித்து
நானும் இருந்தேன்நற் போதியின் கீழே.

ஞானத்தலைவியாம் பெருமாட்டியின் நந்தியினுடைய நகரில் புகுந்து ஊன மில்லாத ஒன்பது கோடி யுகம் தன்னில் ஞானமெனும் பாலால் திருமஞ்சனமாட்டி எம்பெருமானை அர்ச்சித்த வண்ணம் நானும் இருந்தேன் நல்ல அரசமரத்தின் கீழே. 143

செல்கின்ற வாறறி சிவமுனி சித்தசன்
வெல்கின்றஞானத்து மிக்கோர்முனிவராய்ப்
பல்கின்ற தேவர் அசுரர் நரர்தம்பால்
ஒல்கின்ற வான்வழி யூடுவந் தேனே.

வாழ்க்கையில் இப்படித்தான் செல்வது நல்லது என்ற வரலாற்றை அறியும் சிவமுனிவன் நான். நான் மன்மதனுடைய குழப்படியை வெல்கின்ற ஞானத்துடன் மிகுந்த திறன் உடைய ஓர் முனிவனாக பலவாகிப் பெருகுகின்ற தேவர் அசுரர் மனிதர் அவரிடமாக மிக நுணுக்கமாய வான வழியாக இங்கு வந்து கொண்டேன். 144

சித்தத்தின் உள்ளே சிறக்கின்ற நூல்களில்
உத்தம மாகவே ஓதிய வேதத்தின்
ஒத்த உடலையும் உள்நின்ற உற்பத்தி
அத்தன் எனக்கிங் கருளால் அளித்ததே,

மனத்தின் உள்ளாக மலர்ச்சியுடன் சிறக்கின்ற நூல்களில் உத்தமம் இது என ஆகும்படி ஓதிய வேதத்தில் அதற்கென ஒத்த இந்த உடலையும் அதனுள் உடலைத் தருதற்கு உற்பத்தியாக நின்ற என் கடவுள் எனக்கு அருளால் அந்த வேதத்தை ஓதாதுணரும்படி கொடுத்துளன். 145

நேர்ந்திடு மூல சரியை நெறியிதென்று
ஆய்ந்திடுங் காலாங்கி கஞ்ச மலையமான்
ஓர்ந்திடுங் கந்துரு கேண்மின்கள் பூதலத்
தோர்ந்திடுஞ் சுத்த சைவத் துயிரதே.

அருள் நேராகத் தோன்றிடும் மூலநெறியான சரியை நெறியே இந்த நெறியென்று ஆராய்கின்ற காலாக்கினி முனிவனே கஞ்சமலையமுனிவனே உணரும் கந்துரு முனிவனே கேண்மின்கள். யான் சொன்ன சீலமுடைய இந்நெறியாவது இப்பூமியில் உணரப்படும் சுத்த சைவத்திற்கு உயிர் போலும்.
சீலமுடன் நான் உபதேசித்த இந்த நெறி சைவத்திற்கு உயிர்பேன்றது. 146

நான்பெற்ற இன்பம் பெறுகஇவ் வையகம்
வானபற்றிநின்றமறைப்பொருள்சொல்லிடின்
ஊன்பற்றி நின்ற உணர்வுற மந்திரந்
தான்பற்றப் பற்றத் தலைப்படுந் தானே,

நான் ஓர் இன்பத்தைப் பெற்றேன் அதனை இந்த உலகமும் பெறுக. வானினையே பற்றி நின்ற மறைப் பொருளைச் சொல்லத் தொடங்கினால் ஊனுப உடம்பைப்பற்றி நின்ற உணர்வித்து உணர்வாய் உற்ற தாரக மந்திரத்தை தான் மெதுவாக உணர்வினால் பற்றப் பற்ற அதுவெளிப்படும் அன்றே. 147

பிறப்பிலி நாதனைப் பேர்நந்தி தன்னைச்
சிறப்பொடு வானவர் சென்றுகை கூப்பி
மறப்பிலர் நெஞ்சினுள் மந்திர மாலை
உறைப்பொடுங் கூடிநின் றோதலு மாமே.

பிறப்பு ஏதும் இல்லாத நாதனை பேர் ஒன்றால் நந்தி என்று அழைக்கப்படும் குருமணி தன்னைச் சிறப்பொடு தேவர்கள் சென்று கை கூப்பி மறவாது தம் நெஞ்சில் நின்றார். அந்தப் பெருமானை நான் பாடி அவர்க்கே சூட்டிய திருமந்திர மாலையை உள்ளத்திடத்துடன் நீர் கூடி நின்று ஓதுதலும் தக்கதாகும். 148

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சதாசிவம் தத்துவம் முத்தமிழ் வேதம்
மிதாசனி யாதிருந் தேனின்ற காலம்
இதாசனி யாதிருந் தேன்மன நீங்கி
உதாசனி யாதுட னேஉணர்ந் தேமால்.

சதாசிவ மூர்த்தத்தில் நின்றும் தோன்றிய தத்துவமாய முத்தமிழ் வேதமாவன. இந்த வேதத்தை அளவாக உண்பவனுக இருந்தேன். எனது உள்ளத்தை இந்த வேதத்தினையே இருப்பிடமாக கொண்டேன். எக்காலமும் என் மனம் இந்நிலையை உதாசீனமாக்காது அந்த வேத உணர்வுடன் எல்லாம் உணர்ந்து கொண்டோம். 149

அங்கிமி காமைவைத் தானுடல் வைத்தான்
எங்குமி காமைவைத் தானுல கேழையும்
தங்கிமி காமைவைத் தான்தமிழ்ச் சாத்திரம்
பொங்கிமிகாமைவைத்தான்பொருள்தானுமே.

ஈசன் இவ்வுலகில் நெருப்பு மிகுந்து உலகை உண்ணுமை கணக்காக வைத்தான். எனது இந்த உடலையும் கணக்காக வைத்தான். எல்லாவிடமும் ஏதுமொரு பொருளும் மிகாமல் உலகேழையும் வைத்திருக்கின்ருன். தமிழ் சாத்திரங்கள் தங்கி மிகாமல் வைத்துள்ளான். அதன் பொருள் தானும் பொங்கி மிகுந்திடாமல் வைத்திருக்கின்ருன். யாவும் கணக்காகவே வைக்கப்பட்டது 150

பண்டித ராவார் பதினெட்டுப் பாடையுங்
கண்டவர் கூறுந் கருத்தறி வார்என்க
பண்டிதர் தங்கள் பதினெட்டுப் பாடையும்
அண்ட முதலான் அறஞ்சொன்ன வாறே,

பண்டிதர் என ஆவார்கள் பதினெட்டுப் பாடையையும் கண்ட கடவுள் எந் நந்தி சொன்ன கருத்தினை அறிவார்கள் எனச் சொல்லுவாயாக. கற்ற பண்டிதர்களுடைய பதினெட்டுப் பாஷைகளும் அண்டங்களுக்கெல்லாம் முதல்வனுன சிவன் தருமம் சொன்ன வகையாக அவரவர்க்கு ஏற்ப அமைந்தது. 151

பின்னைநின் றென்னே பிறவி பெறுவது
முன்னைநன் ருக முயல்தவஞ் செய்கிலர்
என்னைநன் ருக இறைவன் படைத்தனன்
தன்னைநன் ருகத் தமிழ்செய்யு மாறே.

இந்த அருள் வழியாய சீலத்தை அன்றி இந்த பிறவியில் நின்று நாம் வேறு என் பெறுவது. இதைப் பெறும்படி முன்னர் நன்ருக முயலப் பெறும் தவம் செய்திலர் மக்கள். என்னை நன்ருக கடவுள் படைத்தான் எதற்காக என்ருல் தன்னை நன்ருக தமிழால் பாடி யாவரும் அறியச் செய்யுமாறு போலும். 152

பெற்றமும் மானும் மழுவும் பிறிவற்ற
தற்பரன் கற்பனை யாகுஞ் சராசரத்
தற்றமும் நல்கி அடியேன் சிரத்தினில்
நற்பத முமஅளித் தான்எங்கள் நந்தியே:

இடபமும் மான்கன்றும் மழுப்படையும் என்றும் பிரியாது கொண்ட ஈசன் அவனது கற்பனை யாவதே யாகும் இந்த உலகில் விளங்கும் எவ்வகை உயிரும். அவன் அவர்க்குற்ற நல்வினை தீவினை கொடுத்து அடியேனது சிரத்தினில் தனது நல்ல திருப்பாதத்தையும் கொடுத்தான் அவன் தான் எங்கள் குருவாய நந்தியே. 153

ஞேயத்தை ஞானத்தை ஞாதுரு வத்தினை
மாயத்தை மாமாயை தன்னில் வரும்பரை
ஆயத்தை யச்சிவன் தன்னை யகோசர
வீயத்தை முற்றும் விளக்கியிட் டேனே.

ஞேயமான அறியப் படும் பொருளையும் ஞான மான அறிவையும் ஞாதுருவாய அறிவோனையும் அந்த அறிவோனைப் பற்றிய மாயத்தையும், அந்த பெருமாயையில் வரும் பரையின் அருள் விளக்கத்தையும் அந்த பரையின் உள்ளொளியான சிவத்தையும் அந்தச் சோதி அறியப்படாது இருந்து எல்லா உயிர்க்கும் திருவடி உணர்வு ஊட்டி வரும் பேரருள் மலர்ச்சியின் கருணையையும் முற்றும் இங்கு நான் உங்கட்கு விளக்கிக் கொள்கின்றேனே. 154

விளக்கிப் பரமாகும் மெய்ஞ்ஞானச் சோதி
அளப்பில் பெருமையன் ஆனந்த நந்தி
துளக்கறும் ஆனந்தக் கூத்தன்சொற் போந்து
வளப்பில் கயிலை வழியில்வந் தேனே.

இதனை விளக்கி அறியப்படாத மேலான பொருளாகும் மெய் ஞானச் சோதி அளவு காண்பரிய பெருமை உடையவன்! ஆநந்த வடிவான என் குருவாகும் நந்தி! ஏதும் ஒரு நடுக்கம் அற்ற ஆநந்தக் கூத்தனுடைய சொற்படி புறப்பட்டு அளப்பிலாத பெருமை உடைய திருக்கைலாய வழி யால்யான் வந்தேன். 155

நந்திஅரு ளாலே மூலனை நாடிப்பின்
நந்திஅரு ளாலே சாதசிவ ஞயினேன்
நந்திஅரு ளால்மெய்ஞ்ஞானத்துள் நண்ணினேன்
நந்திஅரு ளாலே நானிருந் தேனே.

என்குருவாய நந்தி அருளாலே மூலன் என்னும் இடையனைக் கண்ட பிற்பாடு அந்த பசுக்களின் துயர் அகற்ற வேண்டி என் நந்தியின் அருளால் நான் சதாசிவன் ஆயினேன். அந்த முறையால் அவன் உடலில் பிரயோகித்து எழுந்து நின்று நந்தி அருளால் உண்மை ஞானத்துள் நான் சென்றேன். அந் நிலையில் முழுவதும் நந்தி அருளால் நான் இருந்தேன்.

# முதல் தந்திரம்

[காரணுகமம்]

## உபதேசம்

விண்ணின் றிழிந்துவினைக்கீடாய்மெய்கொண்டு
தண்ணின் றதாளைத் தலைக்காவல்முன்வைத்து
உண்ணின் றுருக்கியா ரொப்பிலா ஆனந்தக்
கண்ணின்று காட்டிக் களிமபறுத் தானே.

வானின் நின்றும் இறங்கி இவ்வுலகத்து உற்ற வினைக்கு ஏற்ப உடம்பு கொணடு குளிர்ந்த திருக்கொண்ட திருவடியை என்தலைக்கு காவலாக முன்னுக வைத்தருளி உள்ளாகவும் நின்று உருக்குதல் செய்து; ஒப்புதல் ஒன்றும் இல்லாத ஆனந்தத்தை அடைய வழியாகும் அருளாய கணணின்று காட்டி என் மேல் இனியும் பெருக உள்ள களிம்பினை நீக்கியருளினுன் 157

களிம்பறுத் தான்எங்கள் கண்ணுதல் நந்தி
களிம்பறுத் தான்அருட் கண்விழிப் பித்துக்
களிம்பணு காத கதிரொளி காட்டிப்
பளிங்கிற் பவழம் பதித்தான் பதியே.

என்மேல் உற்ற களிம்பினை நீக்கினுன் கண்ணுதற் கடவுளாய என் குரு மூர்த்தி நந்தி. என் களிம்பினை நீக்கினுன் என்னிடத்து உற்ற அருட்கண்ணை விழிப்புறச் செய்து. இனி என் மேல் களிம்பு அணுகாத கதிரொளியினைக் காண்பித்து பளிங்கிலே பவளத்தைப் பதித்தான் பதியான என் அருட் குரு நந்தி.

பதிபசு பாசம் எனப்பகர் மூன்றிற்
பதியினைப் போற்பசு பாசம் அனுதி
பதியினைச் சென்றணு காப்பசு பாசம்
பதியணு கிற்பசு பாசம் நிலாவே.

பதி (கடவுள்) பசு (ஆன்மா) பாசம் இச்சை) எனச் சொல்லப் பெறும் மூன்றில் பதியினைப் போல் பசு பாசம் இரண்டும் அநாதியாக உள்ளன. பதியாய சிவனை பசுவாய ஆன்மாவைப் பற்றும் பாசம் அணுகாது. பசுவாய ஆன்மாவைப் பாசம் பற்றி பெரும் துயரம் புரியும். ஆனுல் பதியான சிவன் தோன்றப் பெற்ருல் ஆன்மாவிடத்து பாசம் நில்லாது ஆன்மாவின் இயல்பும் [பாசத்தின் கொடுமையும் அகன்று சிவமய மேயாகும். 159

வேயின்எழுங்கனல்போலேஇம்மெய்யெனும்
கோயி லிருந்து குடிகொண்ட கோனநந்தி
தாயினும் மும்மலம் மாற்றித் தாா என்னுந்
தோயம தாய்எழுஞ் சூரிய னுமே.

மூங்கிலில் நின்றும் எழுகின்ற நெருப்புல் போல இந்த உடம்பு என்னும் கோயிலிப் இருந்து குடி கொண்ட கடவுள் நந்தி பெற்ற தாயிலும் மிக நல்லன். எனது தாய் நான் குழந்தையாய பருவத்து உற்ற மலத்தை அருவராது நீக்குதல் போன்று எம்மிடம் பெருகுகின்ற மூன்று மலம் (ஆணவம் கன்மம் மாயை) இவற்றை அருவராது மாற்றி முழுவதும் கருணை என்னும் கடல் போல் பெருக ஒளி காட்டி எழும் சூரியனுவான். 160

சூரிய காந்தமுஞ் சூழ்பஞ்சும் போலவே
சூரிய காந்தஞ் சூழ்பஞ்சைச் சுட்டிடா
சூரியன் சந்நிதி யிற்சுடு மாறுபோல்
ஆரியன் தோற்றமுன் அற்ற மலங்களே.

சூரிய காந்தக் கல்லும் அதனைச் சூழ்ந்த பஞ்சும் நெருப்பு உண்டாக்கத் தேள்வை. ஆனுல் சூரிய காந்தக் கல் அதனைச் சூழ்ந்த பஞ்சைச் சுட்டிடாது. ஆனுல் சூரிய காந்தக் கல் சூரியனுடைய திருமுன்பு பஞ்சைச் சுட்டிடும். அதே போன்று குருவாய கடவுள் தோற்ற அவன் திருமுன் மலங்கள் யாவும் சுட்டு எரிபட்டன. மலங்களை ஆன்மா நீக்கவலியில்லை ஆனுல் குருவருளை நீக்கும் 161

மலங்களைந் தாமென மாற்றி அருளித்
தலங்களைந் தானற் சதாசிவ மான
புலங்களைந் தானப் பொதுவினுள் நந்தி
நலங்களைந் தானுள் நயந்தான் அறிந்தே.

மலங்களைந்து தானும்படி மாற்றியருளி தலங்கள் ஐந்து ஆகும் தானத்தில் சதாசிவமாகும் நிலையைப்பெறச் செய்து அதனிடம் ஐந்து புலன்களும் தோற்றிடும் பொதுவில் நின்று புலன்களின் நலங்களைத் தொழிற் படாது செய்து தானேயாவும் உள்ளாக நயப்புடன் ஆட்பட்டார்க்கு வேண்டியவாறு அறிந்து நயந்து கொடுத்தருளி நின்ருன் என்குருவாய நந்தி. 162

அறிவைம் புலனுட னேநான்ற தாகி
நெறியறி யாதுற்ற நீராழம் போல
அறிவறி வுள்ளே அழிந்தது போல
குறியறி விப்பான் குருபர னுமே.

அவ்வாருன அருள் நிலையில் அறிவு ஐம்புலனுடன் கூடியதாய் இதன்வழி எப்படி என அறிய முடியாதுற்ற நீரின் ஆழம் போல அறிவினுள் அறிவு உள்ளே சென்று அழிந்து அது போல் அது எங்குற்றதுஎன அறியாதபடி அந்த அறிவினுள் அறிவாகி அப்பாலுமாய் நின்று குறியான நிலையை அறிவிப்பவன் குருபரனுவான். 163

ஆமேவு பால்நீர் பிறிக்கின்ற அன்னம்போல்
தாமே தனிமன்றில் தன்னந் தனிநித்தந்
தீமேவு பல்கர ணங்களும் உற்றன
தாமேழ் பிறப்பெரி சார்ந்தவித் தாமே.

பசுவிடத்துப் பெறும் பாலின் நீரை பிறித்து உண்ணும் அன்னப்பறவை போல் தானுகத் தனியான கனக சபையில் தன்னந்தனியாய திருக்கூத்து நிகழ்த்துவான் கடவுள். அந்தக் கூத்து தீமை உடைய பல செயல்களாக உலகில் உற்றன. தக்கூத்துத்தான் எல்லாம் இயங்க வைத்து அதனுல் பல செயல் நன்மை தீமை யாவன உற்றன. அந்த கூத்தே ஏழு பிறடபை தந்து நிற்பன. அந்த தீங்குகள் பெருகும் பிறவித் துயர் குருவின் பார்வையால் அழியும். 64

வித்தைக் கெடுத்து வியாக்கிரத் தேமிகச்
சுத்தத் துரியம் பிறந்து துடக்கற
ஒத்துப் புலனுயிர் ஒன்ருய் உடம்பொடு
செத்திட் டிருப்பர் சிவயோகி யார்களே.

பிறவிக்கு உற்ற வித்தினைக் கெடுத்து உபதேசமுறையால் ஆன்மாவிடத்து சுத்தமாய துரிய நிலை பிறந்து பாசப் பிணியாய தொடக்கு அற்றிட இருவினையும் ஒத்து புலன்களும் உயிரும் ஒன்ருகி செத்திட்டிருப்பர் சிவயோகியார்களே இஃதுகுருபரனின்பார்வைக் கடாட்சமும்உபதேசத்தாலும் துரிய நிலை கூடப்பெற்று கரணம் எல்லாம் ஒன்ருய் உலகம் என்று பேச அறியாத நிலையில் இருப்பர் சிவயோகிகள். 16

சிவயோக மாவது சித்தசித் தென்று
தவயோகத் துள்புக்குத் தன்னொளி தானுய்
அவயோகஞ் சாரா தவன்பதி போக
நவயோக நந்தி நமக்களித் தானே.

சிவயோகமாவது சித்து அசித்து என்று தவமாய யோக நிலையில் உள்புகுந்து தனது ஒளிதானுகி அவமாய யோகம் சேராது'' அந்த குருபரனுயை நந்தி என்னுள் தங்கிய அருள் வெளிக்கு நான் போகுமாறு நவமாய யோகமுடைய நந்தி நமக்கு அப்பேற்றைக் கொடுத்தருளினுன். 166

அளித்தான் உலகெங்குந் தானுன உண்மை
அளித்தான் அமரர் அறியா உலகம்
அளித்தான் திருமன்றுள் ஆடுந் திருத்தாள்
அளித்தான் பேரின்பத் தருள்வெளி தானே.

உலகு எங்கும் தானுன உண்மையான தன்மையை எம் கடவுள் நந்தி எனக்குக் கொடுத்தான். தேவர்களும் அறியாத அந்த உலகை எனக்குக் கொடுத்தான். எனக்கு எம்பிரான் நந்தி கொடுத்தான் திருவுடைய கனகசபையில் ஆடும் திருவடிகளை எம்பிரான் நந்தி எனக்குக் கொடுத்தான் பேரின்பத்தின் அருள் வெளியினை. 167

வெளியில் வெளிபோய் விரவிய வாறும்
அளியில் அளிபோய் அடங்கிய வாறும்
ஒளியில் ஒளிபோய் ஒடுங்கிய வாறும்
தெளியும் அவரே சிவசித்தர் தாமே.

வெளியில் வெளிபோய்ச் சேர்கின்ற வண்ணமும் கருணையில் கருணை சென்று அடங்கிய அத்தன்மையும் ஒளியில் ஒளி போய் ஒடுங்கியவாறும் தெளியும் அவரே சிவசித்தர் ஆவார்கள். 168

சித்தர் சிவலோகம இங்கே தெரிசித்தோர்
சத்தமுஞ்சத்தமுடிவுந்தம்முட்கொண்டோர்
நித்தர் நிமலர் நிராமயர் நீள்பர
முத்தர்தம் முத்தி முதல்முப்பத் தாறே.

சித்தர் எனப்படுவார் சிவலோகத்தை இங்கு தரிசித்தோர் அவரே. அத்தன்மையுடன் சத்தமும் சத்தமுடிவும்தம்முட்கொண்டோர் அவரேஉண்மையான சித்தர். நித்தரும் நின்மலரும் நிராமயரும் நீள எங்கும் வியாபகமான பரமுத்தராவார் அவரே முத்தாறு தத்துவங்களையும் கடந்து மேலான பேறுற்றவர். 169

முப்பதும் ஆறும் படிமுத்தி ஏணியாய்
ஒப்பிலா ஆனந்தத் துள்ளொளி புக்குச்
செப்ப அரிய சிவங்கண்டு தான்தெளிந்து
அப்பரி சாக அமர்ந்திருந் தாரே.

முப்பத்தாறு தத்துவமும் கடந்து மேல்போக முத்திக்கு உற்ற ஏணியாகிச் சென்று ஒப்பில்லாத ஆநந்தத்தின் உள்ஒளி புகுந்து செப்புதற்கரிய சிவத்தைக் கண்டு தெளிவு கொண்டு அப்பரிசாகச் சித்தர்கள் அமர்ந்திருந்தார். 170

இருந்தார் சிவமாகி எங்குந்தா மாகி
இருந்தார் சிவன்செயல் யாவையும் நோக்கி
இருந்தார் முக்காலத் தியல்பைக்குறித்தங்கு
இருந்தார் இழவுவந் தெய்திய சோம்பே.

சிவமாகி இருந்தார் எங்கும் தாமாகி இருந்தார். அவ்வணமே இருந்தார் சிவன் செயல் யாவற்றையும் நோக்கி' அங்கு தான் நடந்த நடக்கின்ற நடக்கப் போகின்ற மூன்று காலத்தின் இயல்பையுங்குறித்து அறிந்துஇருந்தார் அங்கு அப்படிஇருப்பஎல்லாம் இழந்துசும்மா இருக்கின்ற சோம்பல் வந்தடைந்தது. 171

சோம்பர் இருப்பது சுத்த வளியிலே
சோம்பர் கிடப்பதுஞ் சுத்த வெளியிலே
சோம்பர் உணர்வு சுருதி முடிந்திடஞ்
சோம்பர்கண் டாரச் சுருதிக்கண் தூக்கமே.

தொடர்ச்சி 8—ம் பக்கம்பார்க்க

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அருள்வசமாய சும்மா இருக்கும் சோம்பர்கள் இருப்பது சுத்த வெளியிலே. சோம்பர் தூங்காமல் தூங்கிக்கிடப்பதும் சுத்த வெளியிலே! சோம்பர்கள் உணர்வும் வேதங்களின் முடிவிடம். சோம்பர்கள் கண்டார்கள் அந்த சுருதியிடத்து தமது தூங்காமல் தூங்கும் சுகத்தை. 172

தூங்கிக்கண் டார்சிவ லோகமும் தம்உள்ளே
தூங்கிக்கண் டார்சிவ யோகமுந் தம்உள்ளே
தூங்கிக்கண் டார்சிவ போகமும் தம்உள்ளே
தூங்கிக்கண் டார்நிலே சொல்வதெவ் வாறே.

அவ்வாறு தூங்கிக் கண்டார்கள் சிவலோகத்தைத் தம்முள்ளாக. தூங்கிக் கண்டார்கள் சிவ யோகத்தையும் தம் உள்ளாக. தூங்கிக் கண்டார்கள் சிவயோகத்தைத் தம் உள்ளே! அவ்வாறு தூங்காமல் தூங்கி இவைகண்டாரது பெருநிலையை நான் எவ்வாறு சொல்வது: 173

எவ்வாறு காண்பான் அறிவு தனக்கெல்லே
அவ்வா றருட்செய்வன் ஆதி யரன்தானும்
ஒவ்வாத மன்றுள் உமைகாண ஆடிடுஞ்
செவ்வானிற்செய்யசெழுஞ்சுடர்மாணிக்கமே

எவ்வாறு ஒருவன் அறிவின் எல்லையைக் காண்பானோ அவ்வாறு அவர்கட்கு அருள்புரிவான் ஆதியாய சிவன். அந்த அறிவின் எல்லையான ஔவணத்தில்லையில் உமையம்மை காண ஆடிடுகின்றான் செக்கர் வானிலும் பார்க்க செவ்விய நலமுடைய செழுஞ்சுடர் மாணிக்கம் போலும் அப்பன். 174

மாணிக்கத் துள்ளே/மரகதச் சோதியாய்
மாணிக்கத் துள்ளே மரகத மாடமாய்
ஆணிப்பொன்மன்றினில்ஆடுந்திருக்கூத்தைப்
பேணித் தொழுதென்ன பேறுபெற் றாரே.

மாணிக்கத் கூத்து உள்ளத்துள்ளே எம்மை உடையவன் சிவன் மாணிக்கச் செவ்வொளியாகி உடைய பெருமாட்டி மரகதப் பச்சை ஒளியாகி மரகத மாடம் போல் ஓங்கும் பரைக்கு உள் ஒளியாகி செவ்வொளி பரந்த அழகிய திவ்வியபொன் வண்ணமான சபையில் ஆடியருளுகின்ற திருக்கூத்தை பேணித்தொழுது என்ன பேறு பெற்றார்கள். அதுவும் பேசலாமோ? 175

பெற்றார் உலகிற் பிரியாப் பெருநெறி
பெற்றார் உலகிற் பிறவாப் பெரும்பயன்
பெற்றார்அம் மன்றிற் பிரியாப் பெரும்பேறு
பெற்றார் உலகுடன் பேசாப் பெருமையே.

அவர்கள் பெற்றார்கள் இந்த உலகில் என்றும் பிரியாத இறவாத பெருநெறி. இந்த உலகில் அவர் பெற்றார் என்றும் பிறவாத பெரும் பயன். அம் மன்றின் திருக்கூத்தைப் பிரியாத பெரும் பேறும் பெற்றார். அவர் பெற்ற பெரும் தன்மை இந்த உலகுடன் ஒப்பிட்டு பேசமுடியாத தொரு மேலாய பெருமையாவது. அது தேன் உண்டவண்டு போல் மெய் மறந்த இன்பமாவது. 176

பெருமை சிறுமை அறிந்தெம் பிரான்போல்
அருமை எளிமை அறிந்தறி வாரார்
ஒருமையுள் ஆமைபோல் உள்ளைந் தடக்கி
இருமையுங் கேட்டிருந் தார்புரை அற்றே.

பெருமை எது சிறுமை எது என அறிந்து எம்பிரான் போல அருமையையும் எளிமையையும் அறிந்து அறிபவர் ஆர்? ஆமை தனக்கு தீங்கு வருகுது என்பது உணர்ந்து தன்னை ஒடுக்கிக் கொள்வது போன்று பஞ்சப் புலன்களையும் அடக்கி இவ்வுலக வாழ்வும் அவ்வுலக வாழ்வும் கெடு இரண்டையும் பெற்று இருந்தார் பெரியோர் சிறுமை அற்று. 177

புரையற்ற பாலினுள் நெய்கலந் தாற்போல்
திரையற்ற சிந்தையுள் சிவனவன் செப்பும்
உரையற்றுணர்வோர்உடம்பிங்கொழிந்தால்
கரையற்ற சோதி கலந்தசத் தாமே.

தீங்கற்ற பாலின் உள்ளாக நெய் கலந்தாற் போல எண்ணம் யாவும் இறந்த சிந்தையுள் சிவனவன் தானே வந்தருளி அருள்வழி காட்டுவான் பேச்சற்று உணர்வோர் தனது உடம்பு இங்கு ஒழியப் பெற்றால் கரைகடந்த சோதியுட்கலந்துசத்தாகி என்றும் நித்தியமாகி விளங்கும். 178

சத்த முதல்ஐந்துந் தன்வழித் தான்சாரில்
சித்துக்குச்சித்தன்றிச்சேர்விடம்வேறுண்டோ
சுத்த வெளியிற் சுடரிற் சுடர்சேரும்
அத்தம் இதுகுறித் தாண்டுகொள் அப்பிலே

சுவை ஒளி ஊறு ஓசை நாற்றம் என்னும் புலன்களாய ஐந்தும் தனது கட்டுப்பாட்டினில் சேர்து கொண்டால் சித்திற்கு சித்து அல்லாமல்சேர்விடம் வேறு உண்டோ சுத்தமான அந்த வெளியில் விளங்கும் சுடரில் சுடர்சேரும். இந்த மெய்ப்பொருளை உணர்ந்து இதனைக் குறித்து அப்பான நீரர்ம் கருணையால் ஆண்டுகொள் வாய். 176

அப்பினிற் கூர்மை ஆதித்தன் வெம்மையால்
உப்பெனப் பேர்பெற் றுருச்செய்த அவ்வுரு
அப்பினிற் கூடிய தொன்றாகு மாறுபோற்
செப்பினிற் சீவன் சிவத்துள் அடங்குமே.

நீரினில் கூர்மையானது சூரியன் வெப்பத்தால் நீர் காய்ச்சப் பெற்று உப்பு எனப் பேர்பெற்று உருவாகி வந்தது. அந்த உப்பானது நீரினுள் கரைந்து ஒன்றாக மாறிடும் அதேவகை போன்று சொல்லப் போனால் சீவன் சிவத்துள் அடங்கும் 180

அடங்குபே ரண்டத் தணுஅண்டஞ் சென்றங்
கிடங்கொண்ட தில்லை இதுவன்றிவேறுண்டோ
கடந்தொறும் நின்ற உயிர்கரை காணில்
திடம்பெற நின்றான் திருவடி தானே.

அடங்கும் இந்த பெரிய அண்டமெல்லாவற்றிலும் அணுவாய அண்டம் சென்று இடம் கொண்டதில்லை. அணு அண்டமே பெரிய அண்டமாகப் பரந்தது. இதுவல்லாமல் வேறில்லை. ஒவ்வொரு உடம்பு தோறும் நின்ற உயிர்க்கு கரை எங்கு என்று கண்டால் திடம்பெற யாவும் தானாகி நின்ற சிவனுடைய திருவடி யேயாகும். 181

திருவடி யேசிவ மாவது தேரில்
திருவடி யேசிவ லோகஞ்சிந் திக்கில்
திருவடி யெசெல் கதியது செப்பில்
திருவடி யே தஞ்சம் உள்தெளி வார்க்கே.

நீங்கள் தெளிந்து கொண்டால் திருவடியே சிவமாவது. நாம் சிந்தித்துப் பார்த்தால் திருவடி தான் சிவலோகமும் ஆவது. நாம் செல்லும் கதியும் திருவடியே ஆவது சொல்லப் போனால் திருவந்தான் தஞ்சம் உள்ளத்து தெளிவார்க்கு. 182

தெளிவு குருவின் திருமேனி காண்டல்
தெளிவு குருவின் திருநாமஞ் செப்பல்
தெளிவு குருவின் திருவார்த்தை கேட்டல்
தெளிவு குருவுருச் சிந்தித்தல் தானே.

இந்த தெளிவாவது சேரும் குருவின் திருமேனி கண்டு கொள்ளலால். இந்த தெளிவு பெறும் குருவினது திருநாமம் சொல்லலால். இந்த தெளிவு வரும் குருவின் திருவார்த்தை கேட்டலால். இந்த தெளிவு வரும் குருவினுடைய உருவைச் சிந்தித்தலால் தான் ஆகும். 183

தானே புலன்ஐந்துந் தன்வச மாயிடும்
தானே புலன்ஐந்துந் தன்வசம் போயிடும்
தானே புலன்ஐந்துந் தன்னில் மடைமாறும்
தானே தனித்தெம பிரான்தனைச் சந்தித்தே

குருவினுடைய தியானத்தால் தான் புலன்கள் ஐந்தும் தன்வசமாயிடும். அதுவுமன்றி புலன் ஐந்தும் தன்பாட்டில் போயிடும் தானாகவே புலன்கள் ஐந்தும் தன்பாட்டில் மடைமாறிக்கொள்ளும். ஒருவழியால் போன புலன் இன்னொரு வழிக்கு அருள் வழிக்குமாறும். தானாகவே இவைகள் தனித்து எம்பிரானைச் சந்தித்துக் கொள்ளும். 184

சந்திப் பதுநந்தி தன்திருத் தாளிணை
சிந்திப் பதுநந்தி செய்ய திருமேனி
வந்திப் பது நந்தி நாமம்என் வாய்மையால்
புந்திக்குள் நிற்பது நந்திபொற் போதமே

நான் சந்தித்துக் கொள்வது என்குருபரனாய நந்தியின் திருவடியிணையை. நான் சிந்திப்பது என் நந்தியின் செய்ய திருமேனியை. என் உண்மை வார்த்தையால் போற்றுவது என் நந்தியின் நாமத்தை. என் மனதிற்குள் நிற்பது நந்தியினுடைய பொன்னான ஞான போதனைகள். 185

போதந் தரும்எங்கள் புண்ணிய நந்தியைப்
போதந் தனில்வைத்துப் புண்ணிய ராயினர்
நாதன் நடத்தால் நயனங் களிகூர
வேதந் துதித்திடப் போயடைந்தார்விண்ணே

ஞானம் தருகின்ற எங்கள் புண்ணியமுடைய நந்தியை ஞானப் புலனில் வைத்து புண்ணியராயின பெருமக்கள் என் நாதன் சிவனது திருநடனத்தால் கண்கள் களிகூரும் படி வேதங்கள் போற்றிடும் படிச்சென்று வான உலகை அடைந்து கொண்டார். 186

உலகுய்யும் உபதேசம் முற்றும்:

---

# பித்துற மயங்கி ஓர் பிணிவரினும்

வருத்தங்கள் பிணிகள் எல்லாவற்றிலும் மிகவும் கொடிய பிணி பையித்தியம் இதுபித்தின் விளைவான மயக்கம். இதனால் சிந்தை தனது நிலை கெட்டு உணர்வு கெட்டு கண்டபடி பிதற்றபேச வேண்டிய நிலையை உண்டாக்கி விடும்.

உலகில் மானம் என்ன! வாழ்வென்ன! நன்மை என்ன! தின்மை என்ன. என எதுவும் அறியமுடியாது! ஒரே மனக்குழப்ப நிலைதான். இந்த மனக்குழப்ப நிலையால் தனது உறிதியான செயல் யாது எனவே தெளிய முடியாத படியான தன்மை வந்திடும். இப்படியானவர் சிலவேளை ஏதோ சொல்லி அழுவர் பிதற்றுவர் ஏசுவர் கத்துவர். அப்படியான நிலையில் எதற்காக நீ இதைச் செய்தாய் என்று கேட்டாலே அவர்க்கு அதுதெரியாது. இது பித்துற்றாரின் நிலை.

இப்படியான ஒரு நிலை எனக்கு வந்தாலும் என் அத்தா உன் திருவடி அல்லால் எனது நாக்கு வேறு சொல்லி அரற்றாது அழாது என்கின்றார் எம் பெருமான் திருஞான சம்பந்தர். இதை என்ன சந்தர்ப்பத்தில் சொல்லுகின்றார் என்றால் அது இது வாகும்.

உலகில் திருஞானசம்பந்தர் இறைவனால் ஆட்கொள்ளப் பெற்ற பின்பு தூய வேதத்தின் ஞான முனிவரானார். அவரது உருவே ஞானத்தின் வடிவு. அத்தகைய பெருமான் திருஞானசம்பந்தர் பலதலங்கட்கு யாத்திரை செய்ய தந்தை சிவபாத விருதயரும் மகனுடனே தலயாத்திரை செய்கின்றார்.

எங்களது சைவத்தில் ஒரு மிகப்பெரிய சீலம் ஒன்று உண்டு. அது தான் துறவியானாலும் தாய் தந்தையரைப் புறக்கணிக்க முடியாது. துறவியாக நாம் அமைந்த போதிலும் தந்தை தாயர்க்குற்ற கடமைகள் செய்தே ஆகவேண்டும், இது நீளவருகின்ற தொரு மரபு. இன்றைய உலகில் சில சாமியள் பிள்ளைகளை நீ தந்தை தாயிடம் போகாதே அதனால் கடவுளை நீ அறியமாட்டாய் எங்களுடன்வா! நீ துறவியாய் இரு என்று சொல்லுகின்றார்கள். இது சரியானது என்று நான் சொல்லமாட்டேன். தந்தைக்கு மகன் மகள் வேண்டிய பணியிடையைச் செய்யாது போனால் எந்த ஒரு நிலையிலும் அவர்முன்னேற முடியாது என்று சிவ நெறி நூல்கள் மொழியும். தந்தை தாயரை புறக்கணித்து அவரின் வயோதிபமான காலத்தில் துயருற விடுவார்கள். மிகக் கொடிய நரகிற்கும் போவார் என அந்த நூல்கள் துணிந்து சொல்வன.

ஆகவே இந்த ஒரு வகையை நாம் இன்று நன்கு நினைவுபடுத்திக்கொள்ளவேண்டும். இப்படியாக திருஞானசம்பந்த சுவாமி கட்கும் ஒரு நிலை ஏற்படுகின்றது. என்னவெனில் திருஞானசம்பந்தர் திருத்தலயாத்திரை செய்து திரு ஆவடுதுறையில் சென்று சேர்கின்றார் அங்கு சுவாமியைத் தரிசித்து ஓர் திருமடத்தில் தங்குகின்றார். அப்போது அவரிடம் தந்தையார் சிவபாத விருதயர் வந்து தாம் யாகம் செய்ய வேண்டியிருப்பதாகவும் அதற்கு பொருள் தருமாறும் வேண்டுகின்றார்.

தந்தையார் மைந்தரிடம் வேண்டும் போது நான் துறவி என்னிடம் நீர் கேட்கலாமா என்று சொல்லமுடியாது? தந்தை நிலையை எம் பிரான் சம்பந்தர் திருவுளத்திற் கொண்டு தனது பெருமானிடம் கேட்டார்க்கு பொருள் கொடுப்பது நீதியாகும் என்ற முறையில் விண்ணப்பம் செய்கின்றார். அப்போது எம்பிரானிடம் தனது துறவின் சீலமே விண்ணப்பிக்கின்றார். இடரினும் தளரினும் நோய் வரினும் என்ன துயர் வரினும் உன்திருவடியே தொழுதெழுவேன். இது வன்றி பித்துற மயங்கி சிந்தை நிலை கெடும் பிணிவரினும் உன் திருவடியே நினைந்து புலம்புவதன்றி வேறு அறியேன். இப்படியான மிக்க அருள் கூர்ந்த திருப்பதிகம் பாடி திருவுளம் களிந்து வேண்டியருள ஆயிரம் தங்கப் பவுண் சிவனருளால் பெற்றுக் கொண்டார். உண்மையான சீலத்தை சிவன் விரும்புவான். ஆகையால் சிவன் அடியார்க்கு சீலமே பெரிது சிந்தித்துத் தெளியுங்கள்.

---

இப்பத்திரிகை கொக்குவில் மேற்கு உயரப்புலத்தில் இருக்கும் இலங்கை மணி சைவநூற் பதிப்பகத்தின் சார்பில் அதன் உரிமையாளர் திரு? வை நல்லையா) இளைப்பாறிய கூட்டுறவு பரிசோதகர்) அவர்களால் புனிதவளன் கத்தோலிக்க அச்சகத்தில் பிரதிபண்ணப்பட்டது:

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org